வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 10.08.2023 வியாழக்கிழமை | இதழ் : 243 | பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## ‘பறாளாய் கந்தசுவாமி கோவிலில் அரச மரத்தை சங்கமித்தை நாட்டினாரென நான் நம்பவில்லை’

### விஞ்ஞானபூர்வ பரிசோதனைக்கு ஜனாதிபதி உத்தரவு

### கூட்டமைப்பின் தலையீட்டினால் அதிரடி நடவடிக்கை

*கொழும்பு, ஓக. 10*

பறாளாய் முருகன் கோயிலின் தலவிருட்சமான அரச மரத்தின் ஆயுட்காலத்தை தீர்மானிக்க விஞ்ஞானரீதியில் ஆராய்ச்சி செய்து, முறையற்ற விதமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற நடவடிக்கையெடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

அத்துடன், விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளாமல் எப்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என தொல்லியல் திணைக்களத்தினரிடம் விசாரணை நடத்தவும் உத்தரவிட்டார்.

நேற்று பாராளுமன்ற வளாகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான த.சித்தார்த்தன், செல்வம்

15

## சமஷ்டியே தீர்வுக்கு ஒரே வழி

### ரணிலுக்கு கஜேந்திரகுமார் கடிதம்

*கொழும்பு, ஓக. 10*

13 தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியுமல்ல, தீர்வுமல்ல. தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே இனப்பிரச்னையை தீர்க்க ஒரேவழியாகும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் 13ஆவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கட்சித் தலைவர்களிடம் கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு தொடர்பில் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

15

# 13ஆவது திருத்தச் சட்டத்தை செயல்படுத்துவது அவசியம்

## சபையில் வலியுறுத்தினார் ஜனாதிபதி ரணில்



**கொழும்பு, ஓகஸ்ட் 10**

**நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.**

**பாராளுமன்றில் நேற்று முற்பகல் ஆற்றிய விசேட உரையின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13ஆவது திருத்தத்தை அடைவதற்கு திறந்த மனதுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி பாராளுமன்றின் அனைத்து உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் எதிர்ப்பது என்ற பாரம்பரிய நடைமுறையில் இருந்து எதிர்க்கட்சிகள் விலகிச் செல்ல வேண்டும்.

முடிவெடுப்பதில் எதிர்க்கட்சிகளைக் கருத்தில் கொண்டு, சமத்துவமானதும் ஒத்துழைப்புடனானதுமான அரசியல் சூழலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படும் முறைமை தொடர்பில் பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன.

இதேபோன்று மாகாண சபை முறைமை தொடர்பிலும் பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன.

நாடு என்ற ரீதியில் முன்னோக்கி செல்ல வேண்டுமாயின் இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

நாட்டின்

15

## உரியநேரத்தில் பதிலளிப்பேன்

### இரா. சம்பந்தன் தெரிவிப்பு

*கொழும்பு, ஓக. 10*

“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டு பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்.”

15

## சிறந்த முடிவுகளுக்கு நாம் ஆதரவளிப்போம்

### சபையில் தெரிவித்தார் சஜித்

*கொழும்பு, ஓக. 10*

ஜனாதிபதி சிறந்த முடிவுகளை எடுத்தால், எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2 மாகாணங்களுக்கும் மட்டுமன்றி, 9 மாகாணங்களுக்கும் தேர்தலை நடத்த முன்வர வேண்டும் என்றும் அவர் கோரினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக்

15

## சர்வஜன வாக்கெடுப்பு நடத்த நீங்கள் தயாரா?

### ரணிலுக்கு சவால் விடுத்தார் சிறிதரன்

*கொழும்பு, ஓக. 10*

தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா,சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா என்பதை அறிய வடக்கு-கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்களிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த நீங்கள் தயாரா என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் ஜனாதிபதியிடம் நேரில் சவால் விடுத்தார்.

13ஆவது அரசமைப்பு திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு

15

## நான் இனவாதியா?

### சிறிதரனிடம் கேட்டார் ரணில்

*கொழும்பு, ஓக. 10*

வடக்கு-கிழக்கு மக்கள் அதிக துயரப்படுகிறார்கள் என்பது எனக்கு தெரியும். நான் இனப்பிரச்னையை தீர்க்கவேண்டுமென உண்மையாக விரும்புகிறேன். சிறிதரன் என்னை சிங்கள இனவாதி என்கிறார். அத்துரலிய ரத்ன தேரர்

15

## மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவில்லை

### வெறைற்றி றிசேர்ச் ஆய்வில் தகவல்

*கொழும்பு, ஓக. 10*

போராட்டக்காரர்கள் காலி முகத்திடலில் இருந்து வெளியேறி ஓராண்டு நிறைவடைந்துள்ள போதிலும் போராட்டத்தினூடாக மக்கள் எதிர்பார்த்த அபிலாஷைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என வெறைற்றி றிசேர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆளுகையுடன், ஊழலை சீர் செய்ய வேண்டும் என 51 வீத மக்கள் ஆய்வில் தெரிவித்துள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

போராட்டம்

15

## யாரும் காலை வாரிவிடாதீர்!

### மனோ கணேசன்

*கொழும்பு, ஓக. 10*

அரசியல் தீர்வு காணும் விடயத்தில் தற்போது மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதால் இந்த விடயத்தில் யாரும் காலை வாரிவிடக் கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்துத்

15

## இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு தென்னிலங்கை இளைஞர். வயது நாற்பதைக் கடந்தாலும் இளைஞர் என்று தானே சொல்கிறார்கள்.

ஒரு பௌத்தரான அவர் எப்போது என்னை சந்தித்தாலும் சைவசித்தாந்தம் பற்றி வகுப்பு எடுப்பார். தினமும் சிவன் கோவிலுக்கு சென்று வழிபட்டுவிட்டுத் தான் அன்றைய கடமைகளைத் தொடங்குவார். எந்தத் துறை சார்ந்து பேசினாலும் அந்தத் துறை பற்றி ஒரு கலாநிதி பட்டம் பெற்றவர் போன்று பேசுவார். சில வேளைகளில் அதிகப் பிரசங்கித்தனம் போல இருக்கும்.

நேற்று முன்தினம் அந்த இளைஞனுடன் ஒரு மொறட்டுவை பல்கலைக்கழக பேராசிரியருடன் சந்தித்தேன். அப்போது அந்த இளைஞர் தன்னை அறிமுகம் செய்த போது, மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் தான் ஆற்றிய ஒரு சிறிய பணி பற்றி எடுத்துச் சொன்னார்.

அவர் அப்போது உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாராம்.

வானியல் துறையில் மிகுந்த ஈடுபாட்டோடு இருந்த அவர் அது தொடர்பாக பல்வேறு நூல்களைப் படித்து அறிந்து வைத்திருந்ததை கவனித்த அப்போதைய பல்கலைக் கழக உபவேந்தர் அவரை பல்கலைக்கழக மாணவர்களுக்கு வகுப்பெடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

அவ்வாறு வகுப்பெடுத்தபோது, பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய விரிவுரையாளர்கள், 'இது என்ன ஒரு ஏ.எல். மாணவன் பல்கலைக் கழகத்தில் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கு வகுப்பெடுப்பதா?' என்று கேள்வி கேட்கத் தொடங்கியிருந்தனராம்.

உபவேந்தர் உடனே இந்த ஏ. எல். மாணவனை விரிவுரையாளர்கள் முன்னால் வகுப்பெடுக்க கேட்டிருக்கிறார். ஒரு மணி நேரம் ஒழுங்குசெய்யப்பட்ட அந்த வகுப்பு நான்கு மணி நேரம் சென்றிருக்கின்றது. அங்கிருந்த விரிவுரையாளர்கள் கேட்ட கேள்விகள் எல்லாவற்றுக்கும் இந்த மாணவன் பதிலளித்திருக்கிறான். சொல்லப்போனால் விரிவுரையளர்கள் அறிந்திராத விடயங்களையெல்லாம் அவன் அறிந்திருந்தது அப்போது தெரியவந்தது.

அன்று அந்த மாணவனை கேள்வி கேட்ட விரிவுரையாளர்களில் ஒருவர்தான் நேற்று முன்தினம் நான் அந்த மாணவனுடன் (இன்றைய நாற்பது தாண்டிய இளைஞன்) சந்தித்த பேராசிரியர்.

அந்தச் சந்திப்பில் அரசியல் எமது பேசுபொருளானதும் பேராசிரியர் யாழ்ப்பாண நிலைமைகளை கேட்டார். அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர் என்பதை நான் அறிவேன். அதனால் என் மனதில் உறுத்திக் கொண்டிருந்த அந்த விடயத்தை அவரிடம் விரக்தியுடன் சொன்னேன்.

'பறாளாய் முருகன் கோவிலில் உள்ள அரச மரத்தை இப்போது சங்கமித்தை கொண்டுவந்து நாட்டியது என்று தொல்லியல் திணைக்களம் அறிவித்திருக்கின்றது. சங்கமித்தை வந்தது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக, ஆனால் இந்தக் கோவில் கட்டப்பட்டது சில நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக. அது எப்படி?' என்றேன்.

இந்த அரச மரம் குறித்த அறிவிப்புக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்திய போராட்டத்தில் அதன் ஊடக பேச்சாளர் எழுப்பிய கேள்வியே என் மனதில் இருந்ததால் அவரிடம் அதனை கேட்டேன்.

அப்போது அந்த பேராசிரியரை முந்திக்கொண்டு அந்த இளைஞன் சொன்னான், அது சரியானது தான். சங்கமித்தை வரும்போது கொண்டு வந்த அரச மரங்களில் ஒன்றை யாழ் தீபகற்பத்துக்கு கடல் மார்க்கமாக வந்திறங்கி உள்ளே வரும்போது ஓர் இடத்தில் நாட்டியது உண்மைதான்' என்றார்.

ஓர் அரச மரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழுமா? என்ற எனது கேள்விக்கு, 'அது என்ன அநுராதபுரத்தில் அவர் நாட்டிய மரம் இருக்கமுடியும் என்றால் யாழ்ப்பாணத்தில் நாட்டியது இருக்காதா?' என்றார்.

அவர் எந்த விடயத்தில் கதைத்தாலும் தகவல்களை சரியாகச் சொல்பவர் என்பதால் அவருடன் அதுகுறித்து மேலும் தர்க்கிப்பதை நிறுத்திக்கொண்டேன். அவர் பௌத்த இனவாதியோ, மதவாதியோ அல்ல. அதிகம் ஏன் அவர் இப்போது சிவபெருமானையே வழிபடுபவர். அத்தகைய ஒருவருடன் நான் தர்க்கிக்க விரும்பவில்லை. அத்தோடு அதனை நிறுத்திவிட்டேன்.

அவருடன் இவ்வாறு தர்க்கித்துவிட்டு வந்த மறுநாள் காலை (நேற்று) இலங்கை சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயாவிடமிருந்து ஒரு குறுந்தகவல் வந்தது.

'பண்டைய யாழ்ப்பாணம், முதலியார் சீ. இராசநாயகம் 97 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த நூல். சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கிருட்டிணசுவாமி அய்யங்காரின் முன்னுரை கொண்ட நூல்.

யாழ்ப்பாணம் சுழிபுரம் அருள்மிகு பறாளை முருகன் கோயில் வளாகத்தில் உள்ள அரச மரம், சங்கமித்திரை கொண்டு வந்த மரங்களுள் ஒன்று என்கிறார் முதலியார் சீ. இராசநாயகம்.'

இதுவே சச்சி ஐயாவின் தகவல். கூடவே முதலியார் இராசநாயகம் எழுதிய 'பண்டைய யாழ்ப்பாணம்' என்ற நூலின் 64ஆவது பக்கத்தில் அதுகுறித்து வந்த பக்கத்தையும் படம் எடுத்து அனுப்பியிருந்தார்.

அந்த தகவல் வந்ததும், முதல் நாள் இதுகுறித்து பேசிய அந்த சிங்கள இளைஞனை தொடர்பு கொண்டு 'நீர் சொன்னது சரிதான்' என்றேன்.

உடனே அவர், Ancient Jaffna என்ற நூலில் இருந்துதான் நான் இந்தத் தகவலை பெற்றேன் என்றார். சச்சி ஐயா எந்த நூலை ஆதாதமாக அனுப்பியிருக்கிறாரோ அதனையே அந்த இளைஞரும் கூறியது அவர்மீது இன்னும் மதிப்பை கூட்டியது.

அவர் சொன்னார், 'சங்கமித்தை இலங்கைக்கு வந்தபோது அவருடன் வந்த ஐந்து பௌத்த துறவிகளில் இருவர் தமிழர்கள்.' என்றார்.

இது குறித்து இன்னமும் அவருடன் பேச வேண்டும் போல இருந்தது. வசதி வருகின்றபோது இன்னுமொருநாள் பேசுவோம்.

இது வரலாறு சம்பந்தப்பட்டது. விவாதிக்கவேண்டியது. அதற்காக இந்த ஊர்க்குருவியும் பௌத்தர்களிடம் காசு வாங்கி விட்டார் என்று யாரும் இனி கூறினாலும் கூறுவார்கள். முதலியார் இராசநாயகமும் வாங்கினார் என்று சொல்கிறார்களோ தெரியவில்லை.

- ஊர்க்குருவி.

# வடக்குக்கு அதிகாரம் கொடுப்பதால் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்குமா?

## சபையில் அத்துரலிய ரத்ன தேரர் கேள்வி

கொழும்பு, ஓக. 10

வடக்குக்கு அதிகாரங்களைக் கொடுப்பதால் மட்டும் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்குமா என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்கக்கூடிய சூழல் 50 வீதம் தற்போது உள்ளது. எஞ்சிய 50 வீதம், நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்த்தால் கிடைத்துவிடும்.

இதனைத் தான் ஜனாதிபதி முதலில் சிந்திக்க வேண்டும். வறுமையால் இன்று அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனை கதைப்போம். வடக்கிற்கு அதிகாரங்களைக் கொடுப்பதால் இந்தப் பிரச்னைகள் தீர்ந்துவிடுமா?

13 ஐ கொடுத்தால் யுத்தம் முடிந்துவிடும் என்று அன்று கூறினீர்கள். யுத்தம் முடிந்ததா? 24 மணிநேரத்தில் சமாதானம் கிடைத்துவிடவில்லை.

தற்போது நீங்கள் செய்யும் செயற்பாடுகள், மீண்டும் நாட்டில் அமைதியின்மைக்குத்தான் வழிவகுக்கும்.

இனங்களுக்கிடையில் பிரச்னைகளை தீர்க்க வேண்டுமெனில் முதலில் தேர்தலை நடத்துங்கள்-என்றார்.

(அ)

# அதிகரிக்கும் ரூபாவின் பெறுமதி

கொழும்பு, ஓக. 10

தொடர்ந்து நான்கு நாட்களாக உயர்ந்து வந்த அமெரிக்க டொலரின் பெறுமதி நேற்று திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதுடன் ரூபாவின் பெறுமதியில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 327.52 ரூபாவாகவும், கொள்வனவு விலை 314.94 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 245.47 ரூபாவாகவும், கொள்வனவு விலை 232.79 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 360.57 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 343.39 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் விற்பனை பெறுமதி 418.91 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 399.98 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

(அ)

# இயக்கச்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி, ஓக. 10

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடல் மட்டத்தில் இருந்து வெறும் ஒன்றரை மீற்றர் உயரமே கொண்ட இயக்கச்சி பிரதேசத்தின் ஆற்று சமவெளி பகுதிகளில் இருந்து தொடர்ச்சியாக மணல் யாழ்ப்பாணத்தை நோக்கிக் கொண்டு செல்லப்படுவதாக கிராம மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மணல் அகழ்வை உடனடியாக தடுக்காவிட்டால் மிக விரைவில் இயக்கச்சி பிரதேசத்தின் நிலங்களும் மாற்றமடைந்து மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்படும் என பொது மக்கள் தெரிவித்தனர்.

எனவே குறித்த விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு விரைவில் குறித்த மணல் அகழ்வை தடுக்குமாறு கிராம மக்கள் கோரியுள்ளனர்.

(அ)

# பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பில் இன்று போராட்டம்

கொழும்பு, ஓக. 10

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று கொழும்பில் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக இலங்கையில் உள்ள மூன்று தனியார் பல்கலைக்கழகங்களுக்கு பட்டப்படிப்பு அந்தஸ்து வழங்கப்படுவதை எதிர்த்தும், உத்தேச தொழிலாளர் சட்டம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் முன்மொழிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த போராட்டம் நடத்தப்படும் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த போராட்டத்துக்கு பல அரச பல்கலைக்கழக மாணவர் சங்கங்களும் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# யாழில் 33 சிறுவர்கள் போதைக்கு அடிமை!

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்ப்பாணத்தில் கடந்த 2 மாதங்களுக்குள் 33 சிறுவர்கள் போதைக்கு அடிமையாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தின்போதே அதிகாரிகளால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் போதைக்கு அடிமையாகி வரும் நிலைமை அதிகரித்து வருகிறது. குறிப்பாக கடந்த 2 மாத காலப்பகுதிக்குள் ளேயே 33 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 பேர் ஹெரோயின் போதைப்பொருளுக்கும் 08 பேர் ஐஸ் போதைப்பொருளுக்கும், 07 பேர் கஞ்சா போதைப் பொருளுக்கும் ஏனையவர்கள் போதை மாத்திரைகளுக்கும் அடிமையாகி உள்ளனர்.

அதேவேளை புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கும் அதிகளவான சிறுவர்கள் அடிமையாகி வருகின்றனர்-என்றனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
10.08.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்துதல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் 13ஆவது திருத்தச்சட்டம் நாட்டுக்கு அவசியமென்றும் அதனை நாட்டுக்கு பொருத்தமான வகையில் பயன்படுத்த வேண்டுமெனவும் தெரிவித்திருக்கின்றார். இதன் மூலம் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில்தான் அரசியல் பிரச்னைக்கான தீர்வை காண்பதென்னும் முடிவை வெளியிட்டிருக்கின்றார். இந்த விடயம் நிச்சயம் ஜனாதிபதி தேர்தலின்போது, பிரதான பேசுபொருளாக இருக்கப் போகின்றது. ரணிலை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர்களும் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தங்களின் நிலைப்பாட்டை பகிரங்கமாக முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ரணில் ஏற்படுத்தியிருக்கின்றார்.

ஒன்றில் ஏனையவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ளவற்றை விடவும் அதிகமான அதிகாரங்களை தருவதாகக் கூறவேண்டும் - அல்லது அதனை இல்லாதொழிக்கும் நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டமே அதிகமென்று கடும்போக்கு தரப்புகள் வாதிட்டுவருகின்ற சூழலில் அதிகமான அதிகாரங்களை தருவதாகக் கூறினால் எண்ணிக்கையில் சிறுபான்மையான - குறிப்பாக தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முடியும் - ஆனால், கடும்போக்குவாதிகளின் கடுமையான எதிர்வினைகளை எதிர்கொள்ள நேரிடும்.

இதன்மூலம் தென்பகுதி சிங்கள மக்களின் ஆதரவில் சரிவை சந்திக்க நேரிடும். இதற்கு மாறாக, 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தால் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களான தமிழ், இஸ்லாமிய மற்றும் மலையக மக்களின் ஆதரவைப் பெறமுடியாது போகும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அனைவரும் ஏதோவொரு வகையில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பாதகமில்லாத வகையிலான முடிவை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ரணில் தந்திரோபாயமாக ஏற்படுத்தியிருக்கின்றார்.

ஒருவேளை சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாராக இருந்தால் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டையே அவர் எடுக்க நேரிடும். பொலிஸ் அதிகாரத்துடன் கூடிய 13ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டை அறிவிப்பதன் மூலம் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முயற்சிக்கலாம். இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு பேரம் பேசுவதற்கான வாய்ப்பொன்று மீளவும் கனிந்திருக்கின்றது. சஜித் அவ்வாறு கூறினால் சிங்கள மக்களின் பெருவாரியான ஆதரவை பெறுவதில் சிக்கல்கள் ஏற்படும். எனவே, அனைவரும் ஏதோவொரு வகையில் 13இற்குள் முடங்கவே வாய்ப்புண்டு. இதனை தந்திரோபாயமாகவும் தூரநோக்குடனும் தமிழ்த் தேசிய தரப்புகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த இடத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரிடமும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயம் தொடர்பில் பேச்சுகளில் ஈடுபட வேண்டும்.

எவர் அதிகம் சாதகமான - அதேவேளை நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களை கூறுகின்றார்களோ - அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முடிவை அறிவிக்க வேண்டும். அதேவேளை, வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான அவர்களின் வாக்குறுதியை குறிப்பிடுமாறும் பேரம் பேசலாம். அவ்வாறு செய்தால் தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்பார்ப்பவர்கள் அதனை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

நடைபெறவுள்ள தேர்தலில் பெரும்பான்மையான சிங்கள மக்களின் ஆதரவை பெறும் நிலையில் எவருமில்லை - இந்த நிலையில் எண்ணிக்கையில் சிறுபான்மையின வாக்குகளுக்கு முக்கிய பங்குண்டு. குறிப்பாக, தமிழ் மக்களின் ஆதரவை முழுமையாக பெறும் ஒருவரே, வெற்றிபெறுவதற்கான வாய்ப்புண்டு. எனவே, இந்தச் சூழலில் வழமைபோல் வெளிப்படையாகக் கூறினால் சிங்கள மக்கள் அதிருப்தியடைந்து விடுவார்கள், அதனால், தேர்தல் முடிந்ததும் பேசுவோமென்று வழமைபோல், மக்களின் தலையில் மிளகாய் அரைக்கும் கதைகளை தமிழ் தேசியக் கட்சிகள் இனியும் கூறிக்கொண்டிருக்கக்கூடாது. இந்த அணுகுமுறை ஏற்கனவே தோல்வியடைந்த ஒன்று.

எனவே, இந்த பின்புலத்தில் ஜனாதிபதி தேர்தல், தமிழ் மக்களுக்கு மீண்டும் பேரம் பேசுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. இதனை தமிழ் தேசிய கட்சிகள் ஒற்றுமையுடன், கச்சிதமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை சரியாகக் கையாளாது விட்டால் தேர்தலுக்கு பின்னரான சூழலை கையாள முடியாது போகும்.

# கட்டைக்காட்டில் விபத்து; மன்னார் இளைஞர் பலி!



*யாழ்ப்பாணம், ஓக. 10*

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்தார்.

கட்டைக்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் கம்பம் ஒன்றில் மோதிப் படுகாயம் அடைந்த நிலையில் அவரை மீட்டவர்கள் உடனடியாக மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டவேளை அவர் மரணமடைந்தார் என தெரிவிக்கப்பட்டது.

மரணமடைந்தவர் மன்னார், முள்ளிக்குளம் பகுதியை சேர்ந்த. 22 வயதுடையவர் எனவும், வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தவர் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்களுக்கு ‘சீல்’

*யாழ்ப்பாணம், ஓக. 10*

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பாலமுரளியின் அறிவுறுத்தலின் பிரகாரம் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான குழு யாழ்ப்பபாணம் நகர் பகுதி உணவகங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய யாழ். போதனா மருத்துவமனையின் பின்புறமாக அமைந்துள்ள ஓர் அசைவ உணவகமும் பண்ணை பகுதியில் அமைந்துள்ள ஓர் அசைவ உணவகமும் பிடிபட்டன.

இந்த இரு உணவக உரிமையாளர்களுக்கும் எதிராக நேற்று புதன்கிழமை யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.


வழககை விசாரணை செய்த நீதிவான் உணவக உரிமையாளர்களை தலா ஒரு இலட்சம் பிணையில் விடுவித்தார். அத்துடன், குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை உணவகங்களை சீல் வைத்து மூடுமாறு கட்டளை வழங்கினார். தொடர்ந்து வழக்கை எதிர்வரும் ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.



இதையடுத்து பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் குறித்த உணவகங்கள் இரண்டும் நேற்றும் சீல் வைத்து மூடப்பட்டன.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஓகஸ்ட் - 10 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆடி 25**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : தசமி**




**மேடம்**

இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். அதிகாரிகளை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**மிதுனம்**

எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் மோதல்கள் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**

சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையை புரிந்து கொள்வீர்கள். உங்களின் புது முயற்சியை அதிகாரி பாராட்டுவார். சிறப்பான நாள்.

**சிம்மம்**

புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உங்கள் கை ஓங்கும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். அதிர்ஷ்டம் நிறைந்த நாள்.

**துலாம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**

பிள்ளைகள் நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருந்த பொருட்களை வாங்கித் தருவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். நன்மைகள் பல நடக்கும்.

**தனுசு**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உயர் அதிகாரிகள் உங்களை நம்பி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். அமோகமான நாள்.

**மகரம்**

மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக்கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**

நண்பர்களின் ஆதரவு கிட்டும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். முன்னேறுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**

நண்பர்களின் ஆதரவு கிட்டும். தாய்வழி பழைய வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# காங்கிரஸ் கட்சி தனது ஆட்சிக் காலத்தில் 90 முறை மாநில அரசுகளை கலைத்தது!

## பா. ஜ. க. அண்ணாமலை

சென்னை, ஓக. 10

“மத்தியில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மாநில அரசுகளை, அரசமைப்பு சட்டத்தின் 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி 90 முறை கலைத்தார்களே - அவைதான் ஜனநாயகத்தின் உண்மையான கறுப்பு தினங்கள்” என்று தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை பதிலளித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“தலைநகர் டில்லியில் முந்தைய காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இருந்த நடைமுறைக்கு மாறாக #DelhiServi ceBill எவ்வாறு வேறுபட்டு இருக்கிறது என்பதை தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் முதலில் தெளிவுபடுத்த வேண்டும்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில், மாநில அரசுகளை அரசமைப்பு சட்டத்தின் 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி 90 முறை கலைத்தார்களே, அவைதான் ஜனநாயகத்தின் உண்மையான கறுப்பு தினங்கள். முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி மட்டும் 50 முறை மாநில அரசுகளை கலைத்தாரே அவைதான் ஜனநாயகத்தின் உண்மையான கறுப்பு தினங்கள்.

மத்திய பா. ஜ. க. அரசு கொண்டுவரும் மக்கள் நலன் சார்ந்த சட்டங்களுக்கு, தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி ஆதரவு தெரிவிப்பதை, பல ஆண்டுகளாக தமிழக மக்களின் உரிமைகளை அடகு வைத்து, காங்கிரஸ் கட்சியின் உற்ற அடிமையாக இருக்கும் கொத்தடிமைக் கூட்டமான தி. மு. க. விமர்சிப்பது வெட்கக்கேடானது”, என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று தனது சமூகவலைதளப் பக்கத்தில், “தலைநகர் டில்லியை ஒரு மாநகராட்சியைப் போலத் தரம் குறைக்கும் #DelhiSer vicesBill மாநிலங்களவையில் நிறைவேறிய நேற்றைய நாள் (நேற்று முன்தினம்), மக்களாட்சியின் கறுப்பு நாள்!” என்று விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கடவுச்சீட்டு பெற முருகன் சார்பில் மனைவி நளினி வழக்கு தாக்கல்!

சென்னை, ஓக. 10

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட முருகன் கடவுச்சீட்டுப் பெற விண்ணப்பிக்க திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னை சென்றுவர அனுமதி வழங்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்த நளினி, முருகன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்து உச்ச நீதிமன்றம், கடந்த 2022 ஆண்டு நவம்பரில் தீர்ப்பளித்தது. இலங்கை நாட்டு குடியுரிமை பெற்ற முருகன் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் முருகன் சார்பில் அவரது மனைவி நளினி தாக்கல் செய்த மனுவில், சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் சொந்த நாட்டுக்கு செல்லும் வரை வெளியே செல்லக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு சிறைகளை விட முகாமின் நிலை மற்றும் சூழல் கடுமையாக உள்ளன.

லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் இருவரும் சேர்ந்து வாழ விரும்புகிறோம். தற்போதைய நிலையில் முருகனுடைய சொந்த நாடான இலங்கையில் அவரது உயிருக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. எனவே அவர் அங்கு செல்ல முடியாது.

எனவே, சர்வதேச கடவுச்சீட்டைப் பெற சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு செல்வதற்காக சிறப்பு முகாமில் இருந்து வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும். அங்கு சென்றுவர தங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க தமிழக அரசுக்கும் வெளிநாட்டினர் பதிவு மண்டல அலுவலருக்கும் உத்தர விட வேண்டும்” என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எம்.சுந்தர் மற்றும் ஆர்.சக்திவேல் ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை இந்த அமர்வு விசாரிக்க வேண்டுமா? அல்லது தனி நீதிபதி விசாரிக்க வேண்டுமா? என தலைமை நீதிபதியின் உத்தரவை பெறும்படி, நீதிமன்ற பதிவுதுறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

(ஐ)

# அநீதிகளுக்கு பொறுப்பேற்று மோடி பதவி விலக வேண்டும்

## திருமாவளவன் பாராளுமன்றில் தெரிவிப்பு

புதுடில்லி, ஓக. 10

மணிப்பூர், ஹரியானா மட்டுமல்லாது ஒட்டுமொத்த நாட்டிலுள்ள சிறுபான்மையின மக்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளுக்கு பொறுப்பேற்று பிரதமர் மோடி பதவி விலக வேண்டும் என மக்களவை உறுப்பினர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

மக்களவையில் மத்திய அரசு மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வரவேற்று பேசினார்.

அவர் தனது உரையில், “மணிப்பூரில் கலவரம் நடந்த பகுதிக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தேன். அதில் இரு தரப்பு மக்களும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதும், பெண்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்தது. அதுமட்டுமல்லாது மணிப்பூர் மாநில மக்கள் அம்மாநில அரசு மீது மட்டும்மல்ல, மத்திய அரசு மீது தங்கள் நம்பிக்கையை இழந்திருப்பதாக கூறினர்.

பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்லவலம் நடத்தி கூட்டுப் பாலியல் வன்கொடுமையை நடத்தியிருக்கிறார்கள். இதற்காக இந்த அரசு வருத்தம் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் ஒரு வரியில் ”இது கண்டிக்கத்தக்கது” எனக் கூறிவிட்டு பிரதமர் தனது வேலையை பார்த்துக்கொண்டிருக்கிறார். இந்த அவைக்கு பிரதமர் மோடி வர வேண்டும் என கட்டாயப்படுத்தி அழைக்கக் கூடிய வகையில் எதிர்கட்சிகள் இந்த தீர்மானத்தை கொண்டுவரும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதே, இந்த அரசின் மீதான நம்பிக்கை போய் விட்டது என்பதை எடுத்துகாட்டுகிறது.

மணிப்பூர் மட்டுமில்லை, ஹரியானாவில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. அவர்கள் தேடி தேடி இஸ்லாமியர்களை படுகொலை செய்கிறார்கள்.

தலித் மக்களுக்கும் பாதுகாப்பில்லை. பெண்களுக்கு பாதுகாப்பில்லை. நாடு முழுவதும் பெண்கள் அச்சத்தில் வாழ்கிறார்கள். இப்படிப்பட்ட தலித் விரோத அரசின் மீது பழங்குடி மக்கள் விரோத அரசின் மீது, இஸ்லாமிய, கிறிஸ்துவ விரோத அரசின் மீது இன்று ஒட்டுமொத்த நாடே நம்பிக்கை இழந்துள்ளது.

இவை அனைத்துக்கும் பொறுப்பேற்று பிரதமர் நரேந்திரமோடி பதவி விலக வேண்டும் - என்றார்.

(ஐ)

# யாழில் பிறப்பு பதிவு இல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை 15

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ். மாவட்டத்தில் 15 சிறுவர்கள் பிறப்பு பதிவற்ற நிலையில் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில்” கடந்த காலாண்டில் பிறப்பு பதிவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 104 ஆக காணப்பட்டபோதும் பல்வேறு பட்ட முயற்சிகளுக்கு பின்னர் 89 பேருக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் பிறப்பு பதிவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 15 ஆகக் காணப்படுவதாகவும், நீதிமன்ற வழக்குகள் மற்றும் தந்தை தாய் இடையே காணப்படும் முரண்பாடு காரணமாகவே இப் பிறப்பு தொடர்பான பதிவை மேற்கொள்வதில் சிக்கல் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் யாழ்.மாவட்டத்தில் காணப்படும் சிறுவர் இல்லங்கள் தொடர்பாக உரிய கண்காணிப்பை மேற்கொள்ளுதல் தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டது.

அத்துடன் ஒரு சில சிறுவர் இல்லங்கள் மாவட்ட செயலக அதிகாரிகளின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பதில்லை எனவும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

அதுமட்டுமல்லாது யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரத்தை கையாளும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுவது தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டது.

குறிப்பாக தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கொடிகாமம், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இல்லாமை சுட்டிக்காட்டப்பட்டது. (அ)



# புத்தளத்தில் ஒதுங்கிய அரிய வகை திமிங்கலம்!

கொழும்பு, ஓக. 10

புத்தளம் மாவட்டம், கற்பிட்டி இப்பந்தீவு பகுதியில் 30 அடி நீளம் உடைய திமிங்கலம் ஒன்று உயிருடன் கரையொதுங்கியது.

உயிருடன் கரையொதுங்கிய திமிங்கலத்தைக் கண்ட மீனவர்கள் கற்பிட்டி வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குத் தகவலை வழங்கினர்.

தகவலறிந்து விரைந்து வந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கற்பிட்டி விஜய கடற்படையினரின் உதவியுடன் திமிங்கலத்தை ஆழமான பகுதியில் விடுவித்ததாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (அ)



# ரயிலுடன் கொள்கலன் மோதியதால் விபத்து!

கொழும்பு, ஓக. 10

மீரிகம-வில்வத்த பிரதேசத்தில் கொள்கலன் பாரவூர்தி யொன்று, ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதன் காரணமாக மலையகத்துக்கான ரயில் போக்குவரத்து தடைப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

வில்வத்த ரயில் கடவையில் நேற்று காலை பொல்காவலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் கொள்கலன் பாரவூர்தி மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது கொள்கலனின் சாரதி வாகனத்தை விட்டுச் சென்றுள்ளதாகவும், காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து காரணமாக இந்த வீதியூடான வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது. (அ)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு யோசனையை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது

## நேற்று சபையில் அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஓக. 10

உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பதற்காக செயற்படுத்தப்படும் யோசனையை எந்த வொரு நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்ற நடைமுறையைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு எதிராக, எந்தவொரு வகையிலும் உத்தரவு அல்லது தீர்ப்பை வழங்குவதற்கு இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை என சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான எந்தவொரு உத்தரவு அல்லது நீதிமன்ற தீர்ப்பும் அரசியலமைப்பு மீறலாக அமையும் என சபாநாயகர் குறிப்பிட்டார்.



அரசியலமைப்பின்148 ஆவது பிரிவுக்கு அமைய, அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்தின் வசம் காணப்படுவதாக சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டமானது அமைச்சரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்ற அரச நிதி தொடர்பான செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், 2023 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் நினைவுபடுத்தினார்.

அதற்கமைய, குறித்த யோசனையானது உயர் நீதிமன்றத்தில் அல்லது 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட வேறு எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்த, மறுபரிசீலனை செய்ய அல்லது சவாலுக்கு உட்படுத்தப்பட முடியாது என்பது சபாநாயகரின் நிலைப்பாடாகும்.

பாராளுமன்ற செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்த அல்லது தலையீடு செய்ய நீதிமன்றத்திற்கு முடியாது என முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க மிகத் தெளிவாக அறிவித்துள்ளதாக சபாநாயகர் குறிப்பிட்டார். (அ)

# பாராளுமன்றத்தில் பணிபுரிந்துவரும் பெண்கள் மீது பாலியல் துன்புறுத்தல்!

கொழும்பு, ஓக. 10

பாராளுமன்றத்தின் பராமரிப்பு திணைக்களத்தில் பணிபுரியும் பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக சமூக வலைத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

பராமரிப்புத் துறையில் பெண்களுக்கு இதுபோன்ற பாலியல் துன்புறுத்தல்கள் நடந்ததாக தமக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி, குறித்த பெண்களிடம் எந்தவொரு பாலியல் துன்புறுத்தலும் நடக்கவில்லை என்று கடிதங்கள் மற்றும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவின் மேற்பார்வையில் மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழுவினால் விசாரணை நடத்தப்படும் என ரோஹினி குமாரி விஜேரத்ன குறிப்பிட்டார்.

அதற்கு பதில் அளித்த பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, பாலியல் வன்கொடுமை தொடர்பான விசாரணைக் குழு நேற்று முன் தினம் முதல் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார். (அ)

# காலாவதியான பொருளாதார முறை மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது


## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10

காலாவதியான பொருளாதார முறைகளை பயன்படுத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கைக்கான முக்கிய வர்த்தக வசதிகளை அறிமுகப்படுத்துவதற்கு அடித்தளமிடும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு 21ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமான பொருளாதார முறைகளை பயன்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்



கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொருளாதாரத்தை டிஜிற்றல் மயமாக்குவதன் மூலம் விரைவான அபிவிருத்தியை அடைய முடியும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதிஇ அதற்காக புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீளவேண்டுமானால் போட்டித்தன்மை கொண்ட பொருளாதாரத்திற்கு செல்ல வேண்டும்.

ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பவுவதற்கும் செயற்படவேண்டும்.

இதேவேளை, பொருளாதாரத்தை மறுசீரமைப்பதில் தனியார் துறைக்கும் பொருளாதாரத்தில் அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# இந்தியாவின் பாதுகாப்பை இலங்கை தனது பாதுகாப்பாகவே கருதுகின்றது

## மிலிந்த மொறகொட சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 10

**இலங்கை ஜனாதிபதியின் சமீபத்தைய இந்திய விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட இலங்கை இந்தியாவின் பாதுகாப்பை தனது பாதுகாப்பாக கருதுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.**

ரைம்ஸ் ஒவ் இந்தியாவுக்கு அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை ஜனாதிபதியின் விஜயத்தின்போது பூகோள அரசியல் மற்றும் மூலோபாய அரசியல் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இந்தியாவின் பாதுகாப்பே எங்களின் பாதுகாப்பு. எங்கள் மத்தியில் நீண்ட கால நாகரீக உறவுகள் காணப்படுகின்றன. நாங்கள் ஒரே இரத்தத்தைக் கொண்டுள்ளோம். இரு நாடுகளுக்கும் இடையில் அதிக தொடர்பாடல்களும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. அவை இலங்கை ஜனாதிபதியின் விஜ



யத்தினால் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்தம் குறித்த இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு குறித்து எந்த சந்தேகமும் இல்லை. எனினும் இதற்கு பாராளுமன்றம் மூலமே தீர்வை காணமுடியும்.

இலங்கை நல்லிணக்கம் குறித்த ஆர்வத்துடன் உள்ளது. ஜனாதிபதி தொடர்புபட்ட அனைவருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். இலங்கை ஆழமாக துருவமயப்படுத்தப்பட்டுள்ள சமூகம். பாராளுமன்றம் மூலமே தீர்வை காண முடியும்.

ஜனாதிபதி தான் என்ன செய்ய முயல்கின்றார் என்பதை தெளிவாக தெரிவித்துள்ளார். உண்மை ஆணைக்குழுவை அமைப்பதன் மூலம் அவர் அதனை செய்ய முயல்கின்றார்- என்றார். (அ)

# சுகாதாரத்துறை பிரச்னை குறித்த அறிக்கையை வெளியிட முடியாது!

## கைவிரித்தார் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஓக. 10

அண்மைய நாட்களில் சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தமது அறிக்கையை சுகாதார அமைச்சரிடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

வைத்தியர்கள் மற்றும் நோயாளர்களின் இரகசியத் தன்மை பேணப்படுவதால் இந்த அறிக்கையை முழுமையாக வெளியிட முடியாது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், பொதுவான முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குறித்த அறிக்கைக்கு அமைய



கடந்த நாட்களில் பதிவான மரணங்கள் அனபிலாக்டிக் அதிர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குறிப்பிடப்பட்ட மருந்தின் தரம் குறித்த அறிக்கைக்காக காத்திருப்பதாகவும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தமது பதிவில் தெரிவித்துள்ளார். (அ)

# விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 10

75 மில்லியன் ரூபாவுக்கும் அதிக சொத்துக்களை எவ்வாறு ஈட்டியமை குறித்து வெளிப்படுத்தாமை தொடர்பில், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த வழக்கை எதிர்வரும் ஒக்ரோபர் 27ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வழக்கை தொடர முடியாது என பிரதிவாதி சமர்ப்பித்த பூர்வாங்க ஆட்சேபனைகள் தொடர்பான வாய்மூல சமர்ப்பணங்களை முன்வைக்க திகதி வழங்குமாறு பிரதிவாதி விடுத்த கோரிக்கையின் பிரகாரம் மேல் நீதிமன்றம் குறித்த வழக்கை பிற்போட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை விமல் வீரவன்ஸ அமைச்சராக இருந்த போது, 75 மில்லியன் ரூபாவிற்கு மேல் சொத்துக்களை அவர் எவ்வாறு ஈட்டினார் என்பது குறித்து தகவல்களை வெளியிட தவறியமையினால், கையூட்டல் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# அக்போ யானைக்கு சிகிச்சையளிப்பதற்காக வெளிநாட்டிலிருந்து வைத்திய நிபுணர் குழு!

கொழும்பு, ஓக. 10

திறப்பனை-லபுனொருவ குளத்திற்கு அருகில் காயமடைந்த நிலையில், வசிக்கும் அக்போ என்ற யானைக்கு சிகிச்சையளிப்பதற்காக வெளிநாட்டில் உள்ள வைத்திய நிபுணர் குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ள யானைக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனினும், அதில் முன்னேற்றம் ஏற்படாமையினால், மேலதிக சிகிச்சைகளை வழங்க வெளிநாட்டு வைத்திய நிபுணர்களின் உதவியை பெற தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, அந்த குழு விரைவில் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தென்கொரியாவில் வெப்ப மண்டலப் புயல் இலங்கை சாரணர் பாதுகாப்பாக உள்ளனர்!

கொழும்பு, ஓக. 10

தென் கொரியாவில் ஏற்பட்டுள்ள வெப்ப மண்டல புயல் காரணமாக, அங்கு நடைபெறும் உலக சாரணர் நிகழ்வில் பங்கேற்றிருந்த ஆயிரக்கணக்கான சாரணர்கள் முகாம்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ள 176 இலங்கை சாரணர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதாக இலங்கையிலுள்ள தென்கொரிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தென் கொரியாவில் நடைபெறும் உலக சாரணர் நிகழ்வில் கலந்து கொண்டுள்ள 176 இலங்கை சாரணர்கள் தொடர்பில் தீவிரமாக கண்காணித்து வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தென்கொரியாவில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் இலங்கை சாரணர் சங்கத்தின் உதவியுடன் குறித்த சாரணர்களின் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் குறித்து தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# உருளைக்கிழங்கை பதனிடும் தொழிற்சாலை நாளை திறப்பு

கொழும்பு, ஓக. 10

இலங்கையின் முதலாவது உருளைக்கிழங்கு பதப்படுத்தும் தொழிற்சாலை நாளை வெள்ளிக்கிழமை பண்டாரவளை கஹஹதெவெல பிரதேசத்தில் திறக்கப்படவுள்ளது.

பண்டாரவளை கஹத்தேவெல ஸ்ரீ சங்கராஜ விகாரை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை விவசாய அமைச்சின் சிறிய அளவிலான விவசாய தொழில்முனைவோர் திட்டத்தின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை விவசாய அமைச்சரினால் திறந்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதன் நிர்மாணப் பணிகளுக்காக 100 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நாட்டில் மிகவும் பிரபலமான உணவான உருளைக்கிழங்கு கீற்றுகள் இறக்குமதி செய்யப்படுகின்ற நிலையில் இதற்காக வருடத்திற்கு சுமார் 3,500 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

இதேவேளை, இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு கீற்றுகளுக்கு உள்நாட்டில் பயிரிடப்படும் உருளைக்கிழங்கு பயன்படுத்தப்படவுள்ளதுடன் ஆரம்ப கட்டத்தில் உள்ளூர் உருளைக்கிழங்கு விவசாயிகள் 250 பேரிடமிருந்து உருளைக்கிழங்கு கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது விவசாய மாதிரி கிராமமான கஹத்தேவலயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை மூலம் நாளொன்றுக்கு 1,000 கிலோ உருளைக்கிழங்கு கீற்றுகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# சினோபெக் நிறுவனத்துக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழங்குவதில் சிக்கல்

கொழும்பு, ஓக. 10

இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்து விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட சீனாவின் 'சினோபெக்' நிறுவனத்துக்கு, எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவது சிக்கலாக மாறியுள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை 'சினோபெக்' நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அவற்றை வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள சட்டச் சிக்கல்களை சுட்டிக்காட்டிய விநியோகஸ்தர்கள், அவற்றில் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தனியாருடையவை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

சினோபெக் இந்த மாத தொடக்கத்தில் முதல் இரண்டு கட்டங்களாக 42,000 மெட்ரிக் தொன் எரிபொருளை இறக்குமதி செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் ஆசிரியர்களுக்கு உளவளப் பயிற்சி தேவை!

யாழ்ப்பாணம், ஓக. 10

சிறுவர் அபிவிருத்தி எனும் போது பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி தேவையென யாழ்.மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆசிரியர்களின் நாளாந்தச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உளவளப் பயிற்சி மற்றும் தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவேண்டும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பில் கலந்துரையாடினேன். இதனையடுத்து தனியார் நிறுவனம் ஊடாக குறித்த பயிற்சியை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு முதல் கட்டமாக பயற்சி வழங்கப்படவுள்ளதோடு பின்னர் கட்டம் கட்டமாக ஏனைய பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கவும் தீர்மானித்துள்ளோம்.

எனவே இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள் ஒத்துழைக்க வேண்டும்-என்றார். (அ)

# ஐந்து மரணங்களுக்கு மருந்து ஒவ்வாமை காரணமாகலாம்!

## சந்தேகம் வெளியிட்டது நிபுணர் குழு

கொழும்பு, ஒக. 10

**அண்மைக் காலத்தில் வைத்தியசாலைகளில் ஏற்பட்ட 06 மரணங்களில் ஐந்து மரணங்களுக்கு மருந்து ஒவ்வாமை காரணமாக இருக்கலாம் என விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட நிபுணர் மருத்துவக் குழு தெரிவித்துள்ளது.**

குறித்த சம்பவம் தொடர்பான அவர்களின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மருத்துவ மற்றும் நோயாளிகளின் இரகசியத்தன்மையை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தின் காரணமாக முழுமையான அறிக்கை வெளியிடப்பட மாட்டாது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் துறையில் அண்மைக்காலமாக இடம்பெற்ற சர்ச்சைக்குரிய நிகழ்வுகள் குறித்து ஆராய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் தேதுனு டயஸ் தலைமையில் ஏழு பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதன்படி நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர், குழு தனது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சுகாதார அமைச்சிடம் கையளித்துள்ளது. நிபுணர் அறிக்கை 12 பரிந்துரைகளை வழங்கியது.

உயிருக்கு ஆபத்தான ஒவ்வாமைகளை நிர்வகிப்பதற்கான சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் அது தொடர்பான பொறிமுறையை தயாரித்தல், உயிருக்கு ஆபத்தான நிகழ்வுகள் பதிவாகும் சந்தர்ப்பங்களில் முறையான மருத்துவ தணிக்கை நடத்துதல், மருந்துகள் பதிவின் போது சீரற்ற பரிசோதனைகள் மூலம் நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளின் தரத்தை பேணுதல் போன்றவை பரிந்துரைகளில் அடங்கும்.

குழுவின் கவனம் செலுத்தப்பட்ட 06 இறப்புகளில் ஐந்து பேர் மருந்து ஒவ்வாமை காரணமாக ஏற்பட்டவை என்று சம்பந்தப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை முடிவு செய்துள்ளது.

ஒவ்வாமையை உண்டாக்கும் மருந்துகள் தொடர்பான தரப் பரிசோதனை அறிக்கைகள் எதுவும் இல்லை என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. (அ)

# விமான நிலைய பாதுகாப்பு அலுவலர் தேர்வில் குழப்பம்!

கொழும்பு, ஒக. 10

விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணிக்கு நபர்களை தெரிவு செய்யும் நேர்முக தேர்வின்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் குழப்பமான சூழ்நிலை நிலவியுள்ளது.

குறித்த பணிக்கு உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலையிடுகின்றார் என நேர்முகத் தேர்வுக்கு வந்தவர்கள் குற்றம்சாட்டியதை தொடர்ந்தே இவ்வாறு குழப்பமான சூழ்நிலை நிலவியுள்ளது.

இதன்போது, 25 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உரிய விதத்தில் தெரிவு செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதன்படி, 100 ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும், 50 பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் நியமிப்பதற்காக பல சுற்று நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன.

அதில் 100 ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், 50 பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், 25 பெண் உத்தியோகத்தர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மிகுதி 25 பெண் உத்தியோகத்தர்களுக்கு பதிலாக ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு அமைச்சரின் தலையீடே காரணம் என விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாகவே கட்டுநாயக்க விமான நிலையத்தில் குழப்பமான சூழ்நிலை நிலவியுள்ளது. (அ)



# வீதியை புனரமைத்து தருமாறு கிராஞ்சி மக்கள் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஒக. 10

பல்லவராஜன் கட்டு கிராஞ்சி ஊடாக வலைப்பாடு செல்லும் வீதியை புனரமைத்து தருமாறு கிராஞ்சி மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கிராஞ்சி அந்தோனியார் ஆலயத்திலிருந்து பேரணியாக கிராஞ்சி பொதுச்சந்தை வரை முன்னெடுத்தனர்.

குறித்த வீதி புனரமைப்பதற்கான பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டாலும் இடையில் கைவிடப்பட்டது .

பல வருட காலமாக இந்த வீதி அபிவிருத்தி செய்யப்படாமையால் போக்குவரத்து செய்வதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக குறிப்பிட்டுள்ளனர். (அ)

# எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றும் தொல்லியல் திணைக்களம்

## அமைச்சரவையில் சுட்டிக்காட்டிய டக்ளஸ்

கொழும்பு, ஒக. 10

“தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வுகளும் அடையாளப்படுதல்களும் இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் கலாசார தொன்மைகளையும் வரலாறுகளையும் பேணிப் பாதுகாப்பதாக அமைய வேண்டுமே தவிர, எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவதாக அமையக்கூடாது” என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது ”சுழிபுரம், பறாளாய் முருகன் ஆலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் 3 தொல்லியல் திணைக்களத்திற்கு உரிய பகுதியாக அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமையை சுட்டிக் காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தும் செயற்பாடானது உரிய வழிமுறைகளை பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதை தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் "நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் சூழலில், குறுகிய நலன்களுக்காக சிலரினால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான விடயங்கள் வேதனைக்குரியவை என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய நல்லிணக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட இணக்க அரசியல் என்பது, இருப்பவற்றை பாதுகாத்து முன்னோக்கி நகர்வதாகவும் பிரச்சினைகளை இலகுவாக தீர்ப்பதற்கான பொறிமுறையாகவும் இருக்க முடியுமே தவிர, தவறான நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதாக இருக்க முடியாது” எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை அமைச்சரவை ஏற்றுக்கொண்ட நிலையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, குறித்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் அமைச்சரவைகளில் கலந்துரையாடி சரியான தீர்மானங்களை மேற்கொள்வதன் ஊடாக தவறுகள் இடம்பெற்றிருப்பின் திருத்திக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார். (அ)

# யாழில் விழிப்புலனற்ற மாணவர்களுக்கு வெள்ளைப்பிரம்பு, சீருடைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக. 10

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் விழிப்புலனற்ற மாணவர்களுக்கு வெள்ளைப் பிரம்புடன் நடப்பதற்கு பயிற்சி வழங்கும் விழிப்புணர்வு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ். சுதர்ஷன் தலைமையில் இந்த ஆரம்ப நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு வெள்ளைப் பிரம்புடன் நடப்பதற்கு பயிற்சி வழங்குதலும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக விழிப்புணர்வு செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



யாழ். பிரதேச செயலகத்தில் பிரதேச செயலரினால் வெள்ளைப் பிரம்புகள், சீருடைகள் வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் விழிப்புணர்வு நடவடிக்கை தொடர்ந்து பொது இடங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதேச செயலர் உள்ளிட்ட உத்தியோகஸ்தர்கள், விழிப்புலனற்றோர் சங்க அமைப்புக்கள் உட்பட விழிப்புலனற்ற மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தனியார் கல்வி நிறுவனங்களின் விவரங்களை திரட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 10

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான விவரங்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் சேகரிக்கப்படும் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தனியார் கல்வி நிறுவனங்களுக்கான பொறிமுறை மற்றும் கட்டுப்பாடுகளை வகுக்க தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழகத்தில் ஒதுங்கிய மூன்று யாழ். மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஒக. 10

மீன்பிடி தொழிலுக்காக கடலுக்குச் சென்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த மீனவர்கள் மூவர் தமிழ் நாட்டில் படகுடன் கரையொதுங்கியுள்ளனர்.

எழுவைதீவு பகுதியில் இருந்து கடந்த 6 ஆம் திகதி புறப்பட்ட குறித்த மீனவர்களின் படகு பழுதடைந்த நிலையில் தமிழகத்தின் வேதாரணியம் கடற்கரையில் கரையொதுங்கினர்.

ஆனைக்கோட்டை, குருநகர் மற்றும் வல்வெட்டித்துறையை சேர்ந்த மூன்று மீனவர்களே இவ்வாறு படகுடன் தமிழகத்தில் கரையொதுங்கியுள்ளனர். (அ)

# ரஷ்யா எதிர் உக்ரைன்:

## இந்தியா வல்லரசு வரிசையில் இடம் பெறும் வாய்ப்பை தவறவிட்டதா? சவூதி என்ன சாதித்தது?

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடைபெற்று வரும் உக்ரேன் -ரஷ்யா இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியை சவூதி அரேபியா தற்போது முன்னெடுத்துள்ளது. சவூதி அரேபியாவின் இந்த முயற்சியை இந்தியா முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ரஷ்யா, உக்ரேன் என இருநாடுகளுடனும் நட்புறவு கொண்டுள்ள நாடு என்பதே, போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியை இந்தியா மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டதற்கு முக்கிய காரணம்.

அத்துடன், மேற்கத்திய நாடுகளை அணுகுவது போன்று இந்தியாவை ரஷ்யா பார்க்காது என்ற புரிதலின் காரணமாக, போரை முடிவுக்கு வருவது குறித்த இந்தியாவின் யோசனையை ரஷ்யா நிராகரித்துவிடாது என்பதும் இந்தியா மீதான இந்த எதிர்பார்ப்புக்கு மற்றொரு காரணமாக இருந்தது.



ஆனால், இந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமாக பெரிய முயற்சியை இந்தியா இதுவரை முன்னெடுக்கவில்லை. மாறாக, போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சிகளை சவூதி அரேபியா தற்போது முன்னெடுத்துள்ளது.

ரஷ்யா - உக்ரேன் போரை முடிவுக்கு கொண்டு வர சவூதி நடத்தியுள்ள முதல் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்துள்ளது. இந்த விவகாரத்தில் சவூதி அரேபியா முன்னிலையில் இருப்பதாக கருதப்படும் நிலையில், இந்தியா ஏன் இதுபோன்ற பகிரங்கமான முயற்சியை எடுக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது.

### 40 க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்பு

இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்ற இந்த ஆலோசனைக் கூட்டம், சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் சனிக்கிழமை தொடங்கியது. போர் நிறுத்தத்திற்கான தீர்வை எட்டும் வரை பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்துவது என்று இக்கூட்டத்தில் பங்கேற்ற நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.

“போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பான சர்வதேச அளவிலான ஆலோசனைகள் மற்றும் யோசனைகளை கருத்தில் கொள்ள, இந்த அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ள நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன” என்று சவூதி பிரஸ் ஏஜென்சி தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கவில்லை என்றாலும், இதில் பங்கேற்றுள்ள பிற நாடுகள் முன்வைக்கும் யோசனைகளை உன்னிப்பாக கவனித்து வருவதாக ரஷ்ய அரசு கூறியுள்ளது.

### அமெரிக்கா மகிழ்ச்சி

ரஷ்யா -உக்ரேன் போரில், மேற்கத்திய நாடுகளின் ஆதரவு உக்ரேனுக்கு இருக்கும் நிலையில், பூமிப் பந்தின் தெற்குப் பகுதியில் உள்ள நாடுகளின் ஆதரவையும் உக்ரேன் நாடி வருகிறது. இந்த நிலையில், ஜெட்டாவில்





தொடங்கியுள்ள இந்த பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

“உக்ரேன் போர் உலகம் முழுவதும் ஏற்படுத்தி உள்ள தாக்கங்கள் குறித்தும், இப்போரை முடிவுக்கு கொண்டு வருவது பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. உக்ரேனில் நீடித்த அமைதியை நிலைநாட்டுவதற்கு தேவையான யோசனைகளை பகிர்ந்து கொள்வதற்கு பல்வேறு நாடுகள் இங்கு ஒன்றிணைந்துள்ளன. பல நாடுகளுடன் உரையாடுவதற்கான ஆக்கப்பூர்வ வழியை ஏற்படுத்தி தந்துள்ளதற்காக சவூதி அரேபியாவுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்” என்று ஜெட்டா அமைதி பேச்சுவார்த்தையில் பங்கேற்ற அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### போரில் ரஷ்யா - உக்ரைனின் தற்போதைய நிலை என்ன?

உக்ரேன் போரை முடிவுக்கு கொண்டு வர சர்வதேச நாடுகள் முயற்சியை முன்னெடுத்திருந்தாலும், போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்யா-சவூதி அரேபியா இடையே நேரடி பேச்சுவார்த்தை நடைபெற தற்போதைக்கு வாய்ப்பில்லை என்பதே இருநாடுகளின் கருத்தாக உள்ளது. போரில் ரஷ்யாவிடம் இழந்த இடங்களை பதில் தாக்குதல் மூலம் மீட்டெடுப்பதில் உக்ரேன் முனைப்பு காட்டி வருவதே இதற்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.




அத்துடன் ரஷ்யாவோ, உக்ரேனோ போர் நிறுத்தத்திற்கு இதுவரை தயாராக இல்லாதபோது, இரண்டு நாடுகளும் எதிரெதிரே அமர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்க இயலாது என்றும் தெரிகிறது.

உக்ரேன் மீது போர் தொடுத்த போதே ரஷ்யா நீண்ட கால மோதலுக்கு தயாராகவே இருந்தது. இதன் காரணமாக, நீண்ட நாட்களாக இப்போரில் அதன் கையே ஓங்கி இருப்பதாக தோன்றியது. தற்போதைய நிலையில் ரஷ்யா போர் நிறுத்தத்தை எதிர்க்காவிட்டாலும், போரில் இதுவரை ஆக்கிரமித்துள்ள பகுதிகளை ரஷ்யா, உக்ரேனிடம் திரும்ப தராது என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.

ரஷ்யாவின் நிலைப்பாடு இப்படி இருக்கும் நிலையில், மேற்கத்திய நாடுகளின் வலுவான ஆதரவை பெற்றுள்ளதால், போர்ச்சூழல் தமக்கு சாதகமாக இருப்பதாக உக்ரேன் ராணுவம் நம்புகிறது. இதன் மூலம் வரும் நாட்களில் போரில் தமது கை ஓங்கும் என்பதும் அதன் நம்பிக்கையாக உள்ளது.

### ரஷ்யாவை இந்தியா பகிரங்கமாக கண்டிக்காதது ஏன்?

ரஷ்யா மற்றும் உக்ரேனின் நிலைப்பாடு காரணமாக, இந்தப் போர் தற்போதைக்கு முடிவுக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் தெரியவில்லை. இந்த நிலையில், ராஜதந்திர ரீதியாக முன்னெடுக்கப்படும் முயற்சிகள் மூலம் போரின் பேரழிவு மற்றும் உலகப் பொருளாதாரத்தில் இப்போர் ஏற்படுத்தும் தாக்கத்தை குறைக்க முடியும் என்பது உலக நாடுகளின் நம்பிக்கையாக இருக்கிறது.

ரஷ்யா மற்றும் உக்ரேன் நாடுகளுடன் நல்லுறவை பேணி வரும் முக்கிய நாடாக இந்தியா திகழ்ந்து வருகிறது.

இந்தியாவுடன் ரஷ்யா நீண்டகாலமாக நல்லுறவை காத்து வருவதை கருத்தில் கொண்டு, உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை வெளிப்படையாக கண்டிப்பதை இந்தியா தவிர்த்து வருகிறது. அதேநேரம் உக்ரேனை திருப்திப்படுத்தும் நோக்கில், இப்போரை ஆதரிக்கவில்லை என்றும் இந்தியா கூறி வருகிறது.

கடந்த மே மாதம், ஜப்பானில் நடைபெற்ற ஜி 7 நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடி, “போரை முடிவுக்கு கொண்டு வர இந்தியா தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்” என்று உக்ரேன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியிடம் கூறியிருந்தார்.



### பிரான்ஸ் அதிபரின் விருப்பம்

ரஷ்யா - உக்ரேன் போரை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில், இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து, அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க விரும்புவதாக பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், இப்போரின் தொடக்கத்தில் தெரிவித்திருந்ததாக கடந்த ஆண்டு நவம்பரில், ‘நியூயார்க் டைம்ஸ்’ நாளிதழில் வெளியாகி இருந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், அமைதிக்கான இதுபோன்ற முயற்சிகள் ஒருபோதும் முன்னெடுக்கப்படவில்லை என்றாலும், ரஷ்யா, உக்ரேன் இரு நாடுகளையும் ஒரே மேஜையில் அமர வைத்து அமைதிப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான வல்லமை படைத்த நாடாக இந்தியாவை மேலை நாடுகள் பார்ப்பதையே பிரான்ஸ் அதிபரின் விருப்பம், நியூயார்க் டைம்ஸில் வெளிவந்த கட்டுரை போன்றவை தெளிவுபடுத்துகின்றன.



### ரஷ்யா, மேற்கத்தேய நாடுகளுடனான இந்தியாவின் நிலை

ஆனால், ரஷ்யா மற்றும் மேலை நாடுகள் உடனான நட்புறவில் சம நிலையை பேண இந்தியா நீண்டகாலமாக முயற்சித்து வருகிறது.

கடந்த 1950 மற்றும் 60களில் அணிசேரா இயக்க நாடுகளுக்கு இந்தியா தலைமை தாங்கியது. ஆனால் காலங்கள் மாற, உலகின் உயர்நிலை பொருளாதாரத்தில் இந்தியா இணைந்தது. அத்துடன் அமெரிக்காவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டது.

ஆனால், அதன் பின்பும் ரஷ்யா இந்தியாவின் நம்பகமான கூட்டாளியாக இருந்து வருகிறது. இந்தியாவுக்கான எரிசக்தி மற்றும் ஆயுதங்கள் விநியோகத்தில் ரஷ்யா முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

உக்ரேன் போரின்போது, மேற்கத்திய நாடுகளின் அழுத்தம் இருந்த போதும், ரஷ்யாவிடம் இருந்து இந்தியா தொடர்ந்து கச்சா எண்ணெய் வாங்கி வந்தது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# 13ஆவது திருத்தச்சட்டமும் தொல்லியல் திணைக்களமும்!

-அலசுவது இராஜதந்திரி-

ஒருபுறம் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் அதனோடு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் என்பவை பற்றி தற்போது பரவலாகப் பேசப்பட்டுவரும் நேரத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வெள்ளரசு மரங்கள் குறித்த புதிய சரச்சையும் தலையெடுக்க ஆரம்பித்துள்ளது.

இந்த இரு விவகாரங்களையும் கூர்ந்து நோக்கும்போது தென்னிலங்கை அரச தரப்பு வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல்வாதிகளின் நாடி பிடித்தறிந்து தனது சதுரங்க காய்களை நகர்த்தி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

ஒன்றைக் கொடுக்கும்போது அதனை தட்டிக்கழிப்பதும் பின்னர் கொடுக்கப்பட்டதையே மீளப்பெற விதண்டாவாதங்களை முன்வைத்து சர்ச்சைகளை பெரிதாக்குவதையுமே தமிழ் அரசியல் தரப்பில் மிதவாதிகளோ அல்லது தீவிரவாதிகளோ புரிந்து வந்திருப்பதே வரலாறாக இருக்கின்றது.

இந்திய -இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டதோடு அதன் அமுலாக்கத்துக்கும் இந்திய - இலங்கை தரப்பில் அனுபவம் கொண்ட அரசியலாளர்கள் மற்றும் இராஜதந்திரிகள் முன்வந்திருந்தனர்.

அன்று வடக்கு-கிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரை இந்திய தரப்பிலிருந்து ஒரு பலம் வாய்ந்த பின்னணி அமைந்திருந்தது. வடக்கு - கிழக்கு தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் இந்திய அமைதிப் படையும் வடக்கு - கிழக்கில் நிலை நிறுத்தப்பட்டிருந்தது. 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்துக்கு உகந்த உன்னதமான சந்தர்ப்பம் அப்போது நிலவியிருந்தது. ஆனால், அந்த சந்தர்ப்பத்தை சரிவர பயன்படுத்தாது தற்போது மீளவும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் பற்றி பேசிவருவது எம்மை நாமே மூடர்களாக வெளி உலகுக்கு காட்டுவதாகவே அமைந்துள்ளது.

இந்தியாவுக்குப் பின்னர் நோர்வேயும் அதனோடிணைந்த அனுசரணை நாடுகளும் 2002ஆம் ஆண்டு



முதல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தென்னிலங்கை அரச தரப்புக்குமிடையிலான பேச்சுகளில் ஈடுபட்டு பின்னர் அந்தப் பேச்சுகளின் தோல்வியோடு தமிழீழ விடுதலைப் புலிகளும் 2009ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டனர்.

கண்கெட்டபின்னர் சூரிய வழிபாடு என்பது போலவே வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தரப்பு 13ஆவது திருத்தச் சட்டத்துக்காக தற்போது மீளவும் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளது. இதனிடையே கிழக்கிலங்கையில் தமிழர்களின் மேய்ச்சல் தரைகளில் வெளியிடத்தவர்களின் ஊடுருவல்கள் மற்றும் வவுனியாவில் வெடுக்குநாறி சிவன் ஆலய ஆக்கிரமிப்பு, முல்லைத்தீவில் குருந்தூர் மலை விவகாரம் என்பன தலைகாட்ட ஆரம்பித்தன. இவற்றின் பின்னணியில் தற்சமயம் தொல்லியல் திணைக்களமும் தனது கைவரிசையை காண்பிக்க ஆரம்பித்துள்ளது.

வடக்கே பறாளாய் முருகன் ஆலய வளவில் உள்ள வெள்ளரசு மரத்தை தொல்லியல் சின்னமாக தொல்லியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வெள்ளரசு மரம் என்பது ஒரு புனித மரம். புத்தபகவான் அதன் கீழிருந்தே ஞானம் பெற்றதாக புத்த சமயம் தெரிவிக்கும் நிலையில் அந்த மரத்தின் கிளையொன்றும் இலங்கையில் அநுராதபுரத்தில் நாட்டப்பட்டுள்ளது.

புத்தபகவான் அவதரிக்க முன்னரே உலகின் புராதன மதமாக தோற்றம் பெற்றதே இந்து மதமாகும். இந்து மதம் எங்கு எப்போது யாரால் தோற்றுவிக்கப்பட்ட தென்பது கூட குறிப்பிடப்படாதிருப்பதோடு அந்த மதம் ஒரு வாழ்வியல் முறையாகவே இருந்து வருகின்றது. அரச மரமும் இந்து மத கடவுள்களில் ஒருவரான விநாயகருக்குரிய ஞானம் பொருந்திய ஒரு மரமென்றே குறிப்பிடப்படுவதுண்டு. இதன்மூலம் புத்த பகவான் ஞானம் பெற முன்னரே அந்த மரத்தின் மகிமையை இந்துக்கள் அறிந் திருந்ததையும் புத்த பகவான்கூட பிறப்பால் ஓர் இந்து என்று குறிப்பிடப்படுகின்ற நிலையில் அந்த மரத்தின் மகிமையை அறிந்தே அதனை தனது தியானத்துக்குரிய விருட்சமாக தெரிவு செய்திருப்பாரோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால், தற்போது அரச மரத்தையும் மையமாக வைத்து தமிழர்களை அரசியலில் கேலிக்கூத்தாக்கும் கைங்கரியங்கள் நன்கு திட்டமிட்ட வகையில் நடந்தேறி வருகின்றன. இத்தகைய தருணத்தில் வடக்கு - கிழக்கு தமிழர்கள் மதிநுட்பத்தோடு நடப்பதே காலத்தின் தேவை யாகும். ஏனெனில், தமிழர் தரப்பில் கூட ஆளுமையுள்ள தலைமைத்துவங்கள் இல்லாதிருக்கின்றது. போட்டி தன்மை எதிலும் காணப்படுவதோடு தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தில் வடக்கு-கிழக்கு அரசியல் தரப்பின் ஒற்றுமையீனம் வெளிப்படையாகவே அறியப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் ஒருபுறம் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்க கோருகின்ற அதேசமயம், வெள்ளரசு மர விவகாரத்தையும் நோக்கும் போது வடக்கு-கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை வழங்குவதில் இழுத்தடிப்பை மேற்கொள்ள விகாரைகளை அமைப்பது, அரசமர பிரச்னைகளை முன்னெடுப்பது போன்று தமிழர்களை முட்டாள்களாக வெளி உலகுக்கு சித்தரிக்க வைக்கும் நடவடிக்கைகளிலும் இலங்கை அரச தரப்பு இறங்கியுள்ளது. இதற்கு தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணை பெறப்பட்டுள்ளதையுமே அவதானிக்க முடிகின்றது. ●

# ரஷ்யா எதிர் உக்ரைன்:

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், “இன்று போருக்கான நேரம் அல்ல” என்று கடந்த ஆண்டு செப்டம்பரில் உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற பிராந்திய உச்சிமாநாட்டில், ரஷ்ய அதிபர் புதினிடம், இந்திய பிரதமர் மோதி கூறியிருந்தார்.

**ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர இடம் கிடைக்க வாய்ப்பு**

அணிசேரா கொள்கையின் பின்னணியில், ரஷ்யா- உக்ரேன் போர் விவகாரத்தில், உலக நாடுகளை ஒன்றிணைக்க இந்திய பிரதமர் மோடி முயற்சித்து வருகிறார் என்று நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் கடந்த ஆண்டு இறுதியில் வெளியிட்ட கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமைதிப் பேச்சுவார்த்தையில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கும் போது, சர்வதேச நாடுகளின் மத்தியில் அதன் பார்வையை மாற்றும். அத்துடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர இடத்தை பிடிக்கும் வாய்ப்பும் இந்தியாவுக்கு கிடைக்கும் என்றும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒரு வேளை அதுபோல் நடந்திருந்தால், உலக வல்லரசுகள் வரிசையில் இந்தியாவும் இடம் பெறும் நிலை உருவாகியிருக்கக் கூடும் என்று புவிசார் அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். .

**சவூதி அரேபியாவால் முடிந்தது இந்தியாவால் ஏன் இயலவில்லை?**

ரஷ்யா மற்றும் உக்ரேன் நாடுகளுடன் நல்லுறவை பேணி வரும் நிலையில், போர் நிறுத்தத்திற்கான அமைதிப் பேச்சுவார்த்தையை இந்தியா முன்னெடுத்தால், அது உலக வல்லரசு நாடுகளின் மத்தியில் அதன் செல்வாக்கை மேலும் உயர்த்த தான் செய்யும். இப்படிப்பட்ட நிலையில், இந்த விவகாரத்தில் சவூதி அரேபியா இன்று முன்னெடுத்துள்ள அமைதி முயற்சியை இந்தியா ஏன் மேற்கொள்ளவில்லை என்பதுதான் கேள்வி.

“புவிசார் அரசியல் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த இது சரியான தருணம் அல்ல. மேற்கத்திய நாடுகள் மற்றும் உக்ரேன், தங்களது பதிலடி தாக்குதல் மூலம், போரில் இதுவரை ரஷ்யா கைப்பற்றியுள்ள பகுதிகளை திரும்பப் பெற முடியும் என்று கருதுகின்றன.

இத்தகைய சூழலில் அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்தால், ஆக்கிரமிப்பு பகுதிகளில் இருந்து வெளியேறும்படி ரஷ்யாவை வற்புறுத்த முடியாது. அதேநேரம் ஆக்கிரமிப்பு விஷயத்தில் தற்போதைய நிலையை தொடர உக்ரேன் தயாராக இருக்காது என்பதை இந்தியா அறிந்திருக்கிறது” என்று ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் உள்ள மத்திய ஆசிய மற்றும் ரஷ்ய ஆய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் ராஜன் குமார் கூறியுள்ளார்.

அத்துடன் இந்தியா தீர்க்க வேண்டிய சொந்தப் பிரச்னைகள் நிறைய உள்ளன என்றும், அவற்றை முதலில் தீர்க்க விரும்புவதாகவும் ராஜன் குமார் கூறுகிறார்.

“ஜி20 நாடுகளின் மாநாட்டை நடத்த நிறைய முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதே போன்று, சீனா, பாகிஸ்தான் உடனான பதற்றமான சூழலை தணிக்க வேண்டிய அவசியமும் இந்தியாவுக்கு இருக்கிறது. இந்த நிலையில், ரஷ்யா- உக்ரேன் இடையேயான அமைதி பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது சரியாக இருக்காது” என்றும் அவர் தெரிவிக்கிறார்.

“சீனா, பாகிஸ்தான் உடன் இருந்து வரும் நீண்ட கால பிரச்னைகளுக்கு இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவே இந்தியா எப்போதும் விரும்புகிறது. இந்த விவகாரத்தில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை இந்தியா ஒருபோதும் விரும்பவில்லை.

இத்தகைய நிலைப்பாட்டில் இந்தியா இருக்கும்போது, ரஷ்யா- உக்ரேன் இடையே அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்தால், அதற்கேற்ப தமது வெளியுறவுக் கொள்கையை மாற்றுவதா என்பதில் இந்தியாவுக்கு குழப்பம் உள்ளது” என்று கூறுகிறார் இணைப் பேராசிரியர் ராஜன் குமார்.

**சவூதி அரேபியா பேச்சுவார்த்தையை முன்னெடுக்க என்ன காரணம்?**

உக்ரேன் மீது போர் தொடுத்ததற்காக சர்வதேச நாடுகள் ரஷ்யாவை கடுமையாக கண்டித்து வருகின்றன. ஆனால், இந்த கண்டனத்தையெல்லாம் பொருட்படுத்தாமல் ரஷ்யா உடன் பொருளாதார மற்றும் ராஜாங்க ரீதியிலான நெருங்கிய நட்புறவை சீனா கொண்டுள்ளது.

ரஷ்யா- உக்ரேன் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக சவூதியின் ஜெட்டா நகரில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. இத்தகைய பேச்சுவார்த்தையில் சீனா பங்கேற்பது இதுவே முதல் முறை. ரஷ்யா இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்காத நிலையில். இதில் சீனாவை கலந்துகொள்ள செய்துள்ளது சவூதியின் ராஜதந்திர நடவடிக்கைக்கு கிடைத்துள்ள வெற்றியாகவே பார்க்கப்படுகிறது என்கின்றனர் மேற்கத்திய நாடுகளை சேர்ந்த அரசியல் நோக்கர்கள்.

“சவூதி அரேபியா அமெரிக்காவை சார்ந்திருக்க விரும்பவில்லை. மாறாக பல்வேறு நாடுகளுடன் நட்புறவை பேண விரும்புகிறது. தமது இந்த விருப்பத்தின் வெளிப்பாடாக சவூதி முன்னெடுத்துள்ள அமைதிப் பேச்சுவார்த்தையின் மூலம், சீனா மற்றும் ரஷ்யாவுடன் நட்புறவை மேம்படுத்திக் கொண்டுள்ளது” என்கிறார் ஒத்துழைப்பு மற்றும் அமைதி கட்டமைப்புக்கான ஆராய்ச்சி மையத்தின் தலைவரும். ஆய்வாளருமான டானியா கோலிலத் காதிப்.

சவூதி அரேபியா அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது ஏன் என்பது குறித்து வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவிடம் பேசியபோது அவர் இவ்வாறு கூறினார்.

அமெரிக்காவை அமைதிப்படுத்தவே இந்த நடவடிக்கை ஆனால், இந்த விஷயத்தில் இணைப் பேராசிரியரான ராஜன் குமாரின் பார்வை வேறுவிதமாக உள்ளது.

“அமைதிப் பேச்சுவார்த்தை எனும் சவூதி அரேபியாவின் முயற்சியை பெரிய அளவில் அர்த்தப்படுத்தி கொள்வதற்கு எதுவும் இல்லை. சர்வதேச அளவில் தனது நம்பகத்தன்மையை அதிகரித்துக் கொள்ளவும், உலக நாடுகளின் வரிசையில் முக்கியமான இடத்தை பிடிக்கவும் தான் சவூதி இந்த முயற்சியை முன்னெடுத்துள்ளது” என்கிறார் அவர்.

“அமெரிக்க அதிபர் ஜே பைடனின் தொடர் கோரிக்கைகளை கருத்தில் கொள்ளாமல், கச்சா எண்ணெய் உற்பத்தியை சவூதி தற்போது கணிசமாக குறைத்துள்ளது. இதன் விளைவாக, அமெரிக்காவுக்கும், சவூதி அரேபியாவுக்கும் இடையே சமீபகாலமாக சுமூகமான உறவு இல்லை. இத்தகைய சூழலில் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளை சமாதானம் செய்யும் முயற்சியாக, அந்நாடுகளால் நடத்தி காட்ட முடியாத, இந்தக் கூட்டத்தை சவூதி அரேபியா நடத்தி காட்டியுள்ளது. உக்ரேன் போர் குறித்து விவாதிக்கப்பட்ட இந்தக் கூட்டத்தில் சீனாவை பங்கேற்க செய்தது சவூதி அரேபியாவின் மிகப்பெரிய சாதனை” என்கிறார் ராஜன் குமார். ●

# காணி உறுதிப்பத்திரம் கையேற்கும் நிகழ்வு!



தம்பிலுவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலக செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், திருக்கோவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரத்தை பிரதேச செயலாளர் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் இணைப்பாளரும், வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல், அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஐ.எல்.அப்துல் ஹை, தம்பிலுவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் ஆர்.கோபிநாத் உள்ளிட்ட காணி உத்தியோகத்தர் என பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ)

## மாணவர்களுக்கு நூல் வழங்கல்



திருமலை, ஒக. 10

திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவரது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு தம்பலகாமம் கோட்டத்தில் உள்ள பராசக்தி தமிழ்க் கலவன் பாடசாலை, இராமகிருஷ்ண மிசன் சாரதா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொன்றும் 1680 உரூபா விலையான ஞானோதயம் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல் நேற்று முன் தினம் வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் இவற்றை வழங்கினார்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்,முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் வி.விஜயகுமார், க.பாலச்சந்திரன் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (அ)

# சிமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்பு; 7ஆவது நாளாக தொடரும் போராட்டம்

கிளிநொச்சி, ஒக. 10

கிளிநொச்சி, பூநகரி பொன்னாவெளி சிமெந்து தொழிற்சாலைக்கு எதிரான மக்கள் போராட்டம் நேற்று 07 ஆவது நாளாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து மக்கள் ஒன்றியத்தால் மூன்று கிராமங்களான வேரவில், வலைப்பாடு,கிராஞ்சி ஆகிய கிராமங்கள் இனைந்து சிமெந்து தொழிற்சாலைக்கு எதிராக நடத்தும் சுழற்சி முறையிலான கவனயீர்ப்புப் போராட்டம் வேரவில் வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்று வருகிறது.

பொன்னாவெளி எனும் பழமை வாய்ந்த கிராமத்தில் சிமெந்து தொழிற்சாலைக்கான சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு ரோக்கியோ சிமெந்து நிறுவனம் ஆய்வுகளை மேற்கொண்டு பணிகளை முன்னெடுக்கவுள்ள நிலையில் பொது மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வாரம் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக சுழற்சி முறையிலான கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடற்கரைக்கு அருகில் உள்ள கிராமங்களில் சுமார் 300 மீற்றர் வரையான ஆழத்தில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படும்போது அதன் விளைவாக தங்களது கிராமங்களுக்குள் கடல் நீர் உள்வரும் எனவும் அதனால் கிராம மக்கள் கிராமங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் தெரிவிக்கும் பொதுமக்கள், தொழிற்சாலை கழிவுகள் காரணமாக மோசமான நோய்த்தாக்கங்களுக்கும் பொது மக்கள் முகம் கொடுக்கவேண்டிய சூழ்நிலைகள் உருவாகும் என்றும் தெரிவித்துள்ளனர். (அ)










# கிழக்கில் ஆசிரியர்களின் வாண்மையை விருத்தி செய்வதற்கு உலக வங்கி உதவி!

## மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா மூன்று வலயங்களுக்கும் விஜயம்

திருமலை, ஓக. 10

**கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக உலக வங்கி உதவியுடன் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருகிறது.**

**பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி திட்டம் என்ற மகுடத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.**

முன்னோடியாக மூதூர் பட்டிருப்பு சம்மாந்துறை ஆகிய மூன்று வலயங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் முன்னேற்ற அறிக்கை தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மூன்று வலயங்களுக்கும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் எம்.எம். ஜவாத்

பிரதி கல்விப் பணிப்பாளர் ஆர்.நிமலரஞ்சன் ஆகியோர் விஜயம் செய்து அதிபர் மற்றும் கல்வி சார் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்தினார்கள்.

சம்மாந்துறை வலயத்திற்கான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியில் வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது.

இதன்படி இன்று முதல் வகை மூன்று பாடசாலைகளுக்கு இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

ஏற்கனவே ஏனைய வகை பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஆசிரியர் ஒய்வறை என்பது இனிமேல் ஆசிரியர் அபிவிருத்தி பிரிவு என்று மாற்றப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

மீண்டும் எதிர்வரும் 18 ஆம் திகதி பட்டிருப்பு வலயத்திற்கும் பத்தொன்பதாம் தேதி சம்மாந்துறை வலயத்திற்கும் இறுதிக்கட்ட மதிப்பீட்டிற்காக வருகை தர இருக்கின்றார்கள்.

இதேவேளை, உலக வங்கியின் ஏற்பாட்டில் பேரில் பிறிதொரு நிபுணத்துவ மதிப்பீட்டு குழு இரண்டு வாரங்களில் இந்த பாடசாலைகளுக்கு விஜயம் செய்ய இருக்கிறது.

அதன் அறிக்கையை பொறுத்தே எதிர்காலத்தில் கிழக்கு மாகாண கல்வி வளர்ச்சிக்கு உலக வங்கி நிதி வழங்க இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# கல்முனை ஸாஹிரா சதுரங்கத்தில் சாதனை





அம்பாறை, ஓக. 10

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் ஆண்களுக்கான அனைத்து வயதுப் பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தை வென்று மீண்டும் வரலாற்று சாதனையைப் புரிந்துள்ளது கல்முனை ஸாஹிரா.

கடந்த 05ஆம், 06 ஆம் திகதிகளில் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாகாணமட்ட சதுரங்கப் போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரி அணியினர் 17வயதிற்கு உட்பட்ட பிரிவிலும் 20 வயதிற்கு உட்பட்ட பிரிவிலும் 1ஆம் இடத்தைப் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு, தேசிய போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

# 4 வீடுகளை உடைத்து திருடிய இருவர் கைது

மட்டக்களப்பு, ஓக. 10

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குற்பட்ட இருதயபுரம் பிரதேசத்தில் 4 வீடுகளை உடைத்து பணம், தங்க ஆபரணங்கள், கையடக்க தொலைபேசிகளை திருடிவந்த இரண்டு பேரை நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் அண்மையில் இரவு பூட்டியிருந்த வீடு ஒன்றையும் மற்றும் 3 வீடுகளுக்கும் கதவை உடைத்து உள்நுழைந்து அங்கிருந்து தங்க ஆபரணங்கள் கையடக்கத் தொலைபேசிகள் பணம் திருடப்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக மேற்கொண்டுவந்த விசாரணையின்போது கடந்த புதன்கிழமை நாவற்கேணி பிரதேசத்தில் தலைமறைவாகி இருந்த 30 வயது மற்றும் 32 வயதுடைய இருவரை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து திருடப்பட்ட தங்க ஆபரணங்கள், கையடக்கத்தொலைபேசிகள் மற்றும் பணம் என்பவற்றை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 21 ம் திகதிவரை நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(அ)

# 15 வயதுச் சிறுமி கர்ப்பம் 18 வயது இளைஞன் கைது

மட்டக்களப்பு, ஓக. 10

15 வயது சிறுமியை 3 மாத கர்ப்பிணியாக்கிய 18 வயதுடைய இளைஞன் ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ள சம்பவம் மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் 15 வயதும் 8 மாதம் கொண்ட சிறுமி ஒருவரை 18 வயதுடைய இளைஞர் காதலித்து வந்த நிலையில் சிறுமியை 3 மாத கர்ப்பமாக்கியதையடுத்து அவர்கள் இருவரையும் கணவன் மனைவியாக வாழ்வதற்கு அவர்களது பெற்றோர் அனுமதித்துள்ளனர்.

இது தொடர்பாக சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவல் பிரகாரம் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 18 வயது இளைஞனுக்கு எதிராக கடந்த முதலாம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து அவர்கள் இருவரும் ஒளிந்திருந்த நிலையில் சிறுமியை கர்ப்பமாக்கிய 18 வயது இளைஞனை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்ததுடன் சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# கிழக்கில் எரிசக்தி செயல்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை!



கொழும்பு, ஓக.10

கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்படவுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்கள் குறித்து, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சனா விஜேசேகரவுக்கும் இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இதுகுறித்த விடயத்தை முன்வைத்தார்.

இதன்போது, கிழக்கில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சனா விஜேசேகர இணக்கப்பாட்டை தெரிவித்தார்.

(அ)

# "கிழக்கிலிருந்து மலையகம்" செயல்திட்டம் முன்னெடுப்பு

மட்டக்களப்பு, ஓக. 10

"மலையகம் 200" என்ற செல்நெறிக்கு இணைவாக கிழக்கு மாகாணத்தில் இருந்து புதிய செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

"கிழக்கில் இருந்து மலையகம்" என்ற மகுடத்தின் கீழ் இந்த புதிய செயல்திட்டம் உருவாக்கப்பட்டு புதிய வேலைத் திட்டங்கள் விரைவில் மாகாணம் எங்கும் ஆரம்பிக்கப்பட இருக்கிறது .

இலங்கையின் பொருளாதார சமூக அரசியல் வளர்ச்சியில் முதுகெலும்பாக திகழ்கின்ற மலையக மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்திக்காக பல ஆக்கப்பூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

"மலையகம் 200" என்பது வெறும் கொண்டாட்டமாக போய்விடக்கூடாது என்பதில் இப் புதிய செயலணி கவனம் செலுத்துகிறது.

"கிழக்கில் இருந்து மலையகம்" என்ற செயற்றிட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு ஒத்துழைப்பு வழங்க ஆர்வம் உள்ள அமைப்புகள் தனி நபர்கள் பிரமுகர்கள்

அனைவருக்கும் பகிரங்க திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இத்தாலி கடலில் படகு விபத்து; புலம்பெயர்ந்த 41 பேர் மரணம்!

**ரோம், ஒக. 10**

**துனீசியாவிலிருந்து புலம்பெயர்ந்தோர் பயணித்த படகு கடலில் மூழ்கியதில் 41 புகலிடக் கோரிக்கையாளர்கள் உயிரிழந்தனர் என்று உயிர் தப்பியவர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.**

இத்தாலியின் லம்பேடுஷா தீவு அருகே இந்த படகு விபத்துக்குள்ளானது. இந்தப் பேரழிவில் இருந்து தப்பிய நால்வர், தாங்கள் துனீசியாவில் இருந்து புறப்பட்டனர் என்றும் இத்தாலிக்கு செல்லும் வழியில் படகு மூழ்கியதாகவும் மீட்பு குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளான ஐவரி கோஸ்ட், கினியாவை சேர்ந்தவர்களும் இந்தப் படகில் இருந்தனர் என்று தெரியவருகின்றது.

இந்த ஆண்டில் மட்டும் வட ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பாவுக்கு புலம்பெயர்ந்த 1800 பேர் உயிரிழந்தனர். இதேசமயம், லம்பேடுஷா தீவுப் பகுதியில் கண்காணிப்பு படகுகள் மற்றும் தொண்டு நிறுவனங்களால் 2 ஆயிரம் பேர் மீட்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

துனீசியாவில் அண்மைக் காலமாக கறுப்பின ஆபிரிக்கர்களுக்கு எதிரான நிறவெறியால் அவர்கள் அதிகளவில் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நேபாளத்தில் கடும் மழைவீழ்ச்சி; அனர்த்தங்களால் 38 பேர் பலி!

காத்மண்டு, ஒக. 10

நேபாளத்தில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவுகளில் சிக்கி 38 பேர் பலியாகினர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியவை வருமாறு,

கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். இத்துடன், நாட்டில் இந்த ஆண்டு மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38ஆக உயர்ந்துள்ளது.

இது தவிர, மழை தொடர்பான சம்பவங்களில் 33 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அதிகாரிகள் கூறினர்.

மலைப்பாங்கான நேபாளத்தில் ஜூன் முதல் செப்ரெம்பர் வரை ஆண்டுதோறும் பருவமழை பெய்து வருகிறது. அப்போது ஏற்படும் நிலச்சரிவுகள் மற்றும் வெள்ளப் பெருக்கில் ஏராளமானவர்கள் உயிரிழந்து வருகின்றனர். (ஐ)

# உலக அழகி போட்டியில் பாலியல் தொந்தரவு!




ஜகார்த்தா, ஒக. 10

உலக அழகி போட்டிக்கான இந்தோனேசிய அழகிப் போட்டியில் பாலியல் தொந்தரவு ஏற்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தோனேசிய அழகிப் போட்டி இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் கடந்த ஜூலை 29 முதல் ஒகஸ்ட் 3ஆம் திகதி வரை நடைபெற்றது.


"மூடிய அறையில் ஆண்கள் உள்ளிட்ட 20 பேர் முன்னிலையில் மேலாடையின்றி இருக்க வற்புறுத்தப்பட்டோம்", என்று 6 அழகிகள் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன், அறையின் கதவுகள் மூடப்படாமையால் வெளியில் இருந்தவர்களும் தம்மைப் பார்க்கக்கூடிய நிலை இருந்ததாகவும் போட்டியில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

போட்டியாளர்களின் உடலில் தழும்புகள் உள்ளனவா, பச்சை குத்தப்பட்டுள்ளதா என்று பார்ப்பதற்காகவே ஆடைகளை அகற்ற போட்டி அமைப்பாளர்கள் வலியுறுத்தினர் என்றும் கூறப்பட்டது.

போட்டி அமைப்பாளர்களின் இந்தச் செயல் என்னை மனரீதியாக பாதித்துள்ளது. நிம்மதியாக தூங்க முடியவில்லை என்று போட்டியில் பங்கேற்ற ஒருவர் இந்தோனேசிய தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டார்.

இந்த பாலியல் முறைகேடு குறித்து தீவிர கவனம் செலுத்துவதாக உலக அழகிப் போட்டியை நடத்தும் அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)



இறந்து காய்ந்துபோன பூஞ்செடியில் தும்பிகள் இவ்வாறு வரிசையாக அமைந்துள்ளன. இந்தத் தும்பிகள் வேட்டையாடுவதற்காக தமது வாலை உயர்த்தியவாறு உள்ளன. இது நேச்சர் போட்டோகிராபி போட்டியில் சிறப்பு பரிசு பெற்ற படம்.

# "அணு ஆயுதத்தை நம்பி இருக்காதீர்"

நாகசாகி, ஒக. 10

கடந்த 1945இல் 9ஆம் திகதி ஜப்பான் நாட்டின் நாகசாகி நகரின் மீது அமெரிக்கா அணுகுண்டை வீசியது. இந்தத் தாக்குதலின் நினைவு தினமான இன்று அணு ஆயுதத்தை நம்பி உலக நாடுகள் இருக்க வேண்டாம் என நாகசாகி நகர மேயர் ஷீரோ சுசுகி வலியுறுத்தியுள்ளார்.

ஹிரோஷிமா நகரில் அணுகுண்டை வீசிய மூன்று நாட்களுக்கு பின்னர் நாகசாகி நகரின் மீது அமெரிக்கா அப்போது அணுகுண்டை வீசியது. பற் மான் (Fat Man) எனும் அணுகுண்டை அன்றைய தினம் காலை 11.02 மணி அளவில் அமெரிக்கா வீசியது. அது ஏற்படுத்திய பாதிப்பால் சுமார் 74,000 பேர் உயிரிழந்தனர். அதன் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பலர் வாழ்நாள் முழுவதும் அதன் விளைவுகளை எதிர்கொண்டனர்.

நாகசாகி நினைவு தினமான நேற்று உயிரிழந்தோருக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்விலேயே நாகசாகி நகர மேயரான 85 வயதான ஷீரோ சுசுகி மேற்கண்டவாறு தனது கருத்துகளை வெளிப்படுத்தியிருந்தார். (ஐ)

# இம்ரான் கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டு தடை!

இஸ்லாமாபாத், ஒக. 10

சிறை தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் 5 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் பதவி வகித்தபோது, அந்த நாட்டின் அரச கருவூலத்தில் இருந்த வெளிநாட்டுத் தலைவர்களின் பரிசுப் பொருள்களை சட்டவிரோதமாக அதிக விலைக்கு விற்று ஊழல் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் தொடுத்த வழக்கில், இம்ரான் கானை குற்றவாளி என்று கண்ட நீதிமன்றம் அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இதையடுத்து கைது செய்யப்பட்ட இம்ரான் கான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், 3 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றதால், 5 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடை விதித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டில் இன்னும் சில நாள்களில் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் இம்ரான் கானுக்கு இது பெரும் பின்னடைவாகும்.

# சீனாவில் வரலாறு காணாத மழை; வெள்ளத்தில் சிக்கி 33 பேர் மரணம்!

பீஜிங், ஒக. 10

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது. 18 பேர் காணாமல் போயுள்ளனர்.

பீஜிங்கில் கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கனமழை பெய்ததால் அந்தப் பகுதி முழுவதும் வெள்ளக் காடாக மாறியுள்ளது. இதனால் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்கில் தொடர்ந்து பெய்த கனமழைக்கு 59 ஆயிரம் வீடுகள் சரிந்து வீழ்ந்தன. 15 ஆயிரம் ஹெக்ரெயர்(37 ஆயிரம் ஏக்கர்) பயிர்நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட பாலங்கள், சாலைகள் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சேதத்தின் அளவைக் கருத்தில் கொண்டு, முழுமையாக



மீட்டெடுப்புக்கு சுமார் 3 ஆண்டுகள் வரை ஆகலாம் என்று பீஜிங் துணை மேயர் சியா லின்மாவோ தெரிவித்தார். (ஐ)

# தொடர் தோல்விகளுக்குப் பின்னர் வெற்றிக்கு மீண்டது ஜெவ்னா கிங்ஸ்

கண்டி, ஒக. 10

இரண்டு தோல்விகளுக்குப் பின்னர் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸை வீழ்த்தி நடப்பு சம்பியன் ஜெவ்னா கிங்ஸ் மீண்டும் வெற்றிக்கு திரும்பியுள்ளது.

எல். பி. எல். தொடரின் 13ஆவது போட்டி கண்டி பல்லேகலை மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்தது.

இதில், சகலதுறைகளிலும் அபார ஆற்றல்களை வெளிப்படுத்திய ஜெவ்னா கிங்ஸ் 6 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

பதும் நிஷங்க, பாபர் அஸாம் ஆகிய இருவரும் 7 ஓவர்களில் 57 ஓட்டங்களைப் பகிர்ந்து பலமான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். ஆனால், 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பதும் நிஷங்க (36), பாபர் அஸாம் (24), நுவனிது பெர்னாண்டோ (2), இப்திகார் அஹ்மத் (2) ஆகிய நால்வரும் ஆட்டம் இழந்தனர்.

லஹிரு உதார (29), மொஹமத் நவாஸ் (27) ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 30 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு ஓரளவு தெம்பூட்டினர்.

பின்னர் மொஹமத் நவாஸ், சாமிக்க கருணாரட்ன ஆகிய இருவரும் 6ஆவது விக்கெட்டில் 40 ஓட்டங்களைப் பகிர்ந்ததன் மூலம் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் 146 ஓட்டங்களை மொத்த எண்ணிக்கையாகப் பெற்றது.

147 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜெவ்னா கிங்ஸ் 14.3 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 150 ஓட்டங்களை பெற்று இலகுவாக வெற்றியீட்டியது.



அணிக்கு மீளழைக்கப்பட்ட நிஷான் மதுஷ்க மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி ரஹ்மானுல்லலா குர்பாஸுடன் 32 பந்துகளில் 58 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தார்.

குர்பாஸ் 39 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்த பின்னர் களம்புகுந்த சரித் அசலன்க 12 ஓட்டங்களை மாத்திரம் பெற்று களம் விட்டகன்றார்.

தொடர்ந்து திசர பெரேரா 17 ஓட்டங்களுடனும் நிஷான் மதுஷ்க 46 ஓட்டங்களுடனும் ஒரே ஓவரில் ஆட்டம் இழந்தனர். எனினும் தௌஹித் ஹ்ரிடோய் 14, டேவிட் மில்லர் ஓர் ஓட்டத்தை ஆட்டமிழக்காமல் பெற்றனர். (ஐ)

# மேற்கிந்தியாவுடனான ரி-20 இந்திய அணிக்கு முதல் வெற்றி!

கயானா, ஒக. 10

மேற்கு இந்தியத் தீவு அணிக்கு எதிரான 3ஆவது இருபது -20 போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இரு அணிகளும் 5 போட்டிகள் கொண்ட இருபது 20 கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகின்றன. இதன் முதல் இரு போட்டிகளிலும் மேற்கு இந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது.

அந்த அணி ட்ரினிடாட்டில் நடைபெற்ற முதல் போட்டியில் 4 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், கயானாவில் நடைபெற்ற 2ஆவது போட்டியில் 2 விக்கெட்கள் வித்தியாசத்திலும் இந்திய அணியை வீழ்த்தி இருந்தது.

இந்நிலையில், 3ஆவது போட்டி கயானாவில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கு இந்தியத் தீவு அணி துடுப்பெடுத்தாடியது.

இதன்படி, முதலில் ஆடிய அந்த அணி 20 ஓவரில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 159 ஓட்டங்கள் எடுத்தது. முதல் வீரர் பிரண்டன் கிங் 42 ஓட்டங்கள் எடுத்தார். அதிரடியாக ஆடிய அணித் தலைவர் ரோவ்மென் பாவெல் 19 பந்தில் 40 ஓட்டங்கள் குவித்தார். இந்தியா சார்பில் அதிகபட்சமாக குல்தீப் யாதவ் 3 விக்கெட் வீழ்த்தினார்.

இதன்பின் 160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு தொடக்க வீரர்கள் ஜெய்ஸ்வால் ஓர் ஓட்டத்திலும் ஷுப்மன் கில் 6 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். ஒருகட்டத்தில் இந்தியா 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் இழந்து திணறிய நிலையில் சூர்யகுமார் யாதவ் - திலக் வர்மா கூட்டணி அமைத்து சரிவில் இருந்து அணியை மீட்டெடுத்தனர்.

தொடக்கம் முதலே அதிரடியாக ஆடிய சூர்யகுமார் யாதவ், சிக்ஸர், பௌண்ட்ரிகளாக விளாசியதுடன், 44 பந்தில் 4 சிக்ஸர், 10 பௌண்ட்ரிகளுடன் 83 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

சூர்யகுமார் யாதவ் - திலக் வர்மா ஜோடி 87 ஓட்டங்கள் சேர்த்தது. இதன்பின், அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா, திலக் வர்மாவுடன் இணைந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இதனால், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் 164 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. திலக் வர்மா 49 ஓட்டங்களும், பாண்ட்யா 20 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)

# தொடக்க வீரராகிறார் ஆஸியின் ஸ்ரீவ் ஸ்மித்




சிட்னி, ஒக. 10

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த இருபது - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தில் அவுஸ்திரேலிய அணிக்காக ஒரே ஒரு போட்டியில் மட்டுமே ஆடிய ஸ்ரீவ் ஸ்மித் இப்போது இருபது -20 அணியில் தேர்வு செய்யப்பட்டிருப்பதோடு தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கவுள்ளார்.

எப்படி மெகல்லம்-பென் ஸ்ரோக்ஸ் இணை இங்கிலாந்து கிரிக்கெட்டுக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளதோ, அதேபோல் அவுஸ்திரேலிய இருபது -20 அணியின் புதிய அணித் தலைவர் மிட்செல் மார்ஷ் தலைமையில் ஸ்ரீவ் ஸ்மித் தொடக்கத்துடன் ஒரு புதிய சகாப்தம் திறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, தென்னாபிரிக்கா இருபது - 20 தொடரில் ஸ்ரீவ் ஸ்மித்துடன் தொடக்கத்தில் களமிறங்குவோர் பட்டியலில் ட்ராவிஸ் ஹெட், ஜாஷ் இங்லிஸ், கிளென் மக்ஸ்வெல், மேத்யூ ஷாார்ட், மார்கஸ் ஸ்ரொய்னிஸ் ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

ஒகஸ்ட் 30ஆம் திகதி டர்பனில் அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா முதல் இருபது- 20 போட்டி நடைபெறவுள்ளது. (ஐ)

# ஹசரங்க அபாரம் கண்டி இலகு வெற்றி




கண்டி, ஒக. 10

வனிந்து ஹசரங்க சகலதுறையில் பிரகாசித்ததால் காலி ரைட்டன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் பி லவ் கண்டி 89 ஓட்டங்களால் இலகுவாக வெற்றியீட்டியது.

கண்டி பல்லேகலையில் நடந்த இந்தப் போட்டியில் பி லவ் கண்டி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 203 ஓட்டங்களைக் குவித்தது.

இதில், மொஹமத் ஹரிஸ் (17), பக்கார் ஷமான் ஆகிய இருவரும் 3.4 ஓவர்களில் 26 ஓட்டங்களைப் பகிர்ந்து ஓரளவு நல்ல ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். தொடர்ந்து பக்கார் ஷமான், தினேஷ் சந்திமால் (25) ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டுக்காக 49 ஓட்டங்களை சேர்த்தனர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 103ஆக இருந்தபோது பக்கார் ஷமான் 45 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த அஞ்சலோ மத்தியூஸ் 23 பந்துகளில் 40 ஓட்டங்களையும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய வனிந்து ஹசரங்க 27 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், 2 சிச்ஸர்களுடன் 64 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் லஹிரு சமரக்கோன் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

204 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி ரைட்டன்ஸ் 16.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 114 ஓட்டங்களை மாத்திரம் பெற்று படுதோல்வி அடைந்தது.

போட்டியின் 9ஆவது ஓவரில் காலி ரைட்டன்ஸ் 6 விக்கெட்களை இழந்து 47 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தடுமாற்றத்தை எதிர்கொண்டது.

எனினும், அஷான் ப்ரியஞ்சன் (25), லஹிரு சமரக்கோன் (36) ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 62 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கை 100 ஓட்டங்களைக் கடக்க உதவினர்.

அவர்கள் இருவரைவிட லசித் குரூஸ்புள்ளே (27), ஷகிப் அல் ஹசன் (11) ஆகியோரே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

# பொய்ப் பிரசாரம் செய்தால் சட்ட நடவடிக்கை எடுப்பேன்

## நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 10

**மின்கட்டணம் செலுத்தவேண்டும் என பொய் பிரசாரம் செய்யும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**மின்சார சபைக்கு தாம் எழுதிய கடிதத்திற்கும் இதுவரை பதில் வரவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.**

*கடந்த 2019 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்திற்காக இலங்கை மின்சார சபை விநியோகித்த மின்சாரத்துக்கு செலுத்தவேண்டிய தொகை இன்னும் செலுத்தப்படவில்லை என மின்சார சபை தெரிவித்திருந்தது.*

*மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை மின்சார சபை இவ்வாறு குறிப்பிட்டிருந்தது.*

*2019 ஆண்டு ஒன்பதாம் மாதம் 12 ஆம் திகதி முதல் 15*



*ஆம் திகதி வரை வீரகெட்டிய வீட்டில் நடந்த திருமண வைபவத்திற்கு வழங்கிய தற்காலிக மின் விநியோகத்திற்காக 26,82,246.57 ரூபா செலுத்தப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை கூறியுள்ளது.*

*முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு அமைய இவ்வாறு மின்சாரம் வழங்கப்பட்டிருந்ததாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.*

*எவ்வாறாயினும், இந்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இலங்கை மின்சார சபை அவ்வாறான எந்தவொரு மின் கட்டண பட்டியலையும் தங்களுக்கு இதுவரை அனுப்பவில்லை எனவும், மின் கட்டணப் பட்டியல் எப்போது அனுப்பப்பட்டது என்பதை அறிவிக்குமாறும் கோரியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*(அ)*

# வாகன விபத்தில் இளம் தம்பதி பலி

*கொழும்பு, ஓக. 10*

*அனுராதபுரம் - இராஜாங்கனைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.*

*இந்த சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.*

*இளம் தம்பதியினர் பயணித்த ஹைஏஸ் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் அருகில் இருந்த மரத்துடன் மோதியுள்ளது.*

*இதன்போது ஹைஏஸ் வாகனத்தைச் செலுத்திச் சென்ற 28 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.*

*படுகாயங்களுடன் நோயாளர் காவுகை வாகனத்தில் இராஜாங்கனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 26 வயதுடைய மனைவி இடைவழியில் உயிரிழந்துள்ளார்.*

*இருவரினதும் சடலங்களும் இராஜாங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*உயிரிழந்த இளம் தம்பதியினர் அனுராதபுரம் - பலுகஸ்வெவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*(அ)*

# மின்சாரம் தாக்கி மாணவி மரணம்!

*கொழும்பு, ஓக. 10*

*மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவம் கொழும்பு - கொலன்னாவை பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.*

*பிரத்தியேக வகுப்புக்குச் செல்வதற்காக ஆடையை அழுத்த மின்னழுத்தியைப் பயன்படுத்தியபோதே மின்சாரம் தாக்கிக் குறித்த மாணவி உயிரிழந்துள்ளார்.*

*கொழும்பில் பிரபல பெண்கள் பாடசாலையொன்றில் தரம் 10 இல் கல்வி கற்கும் சுரேந்திரன் கவிதா (வயது 15) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.*

*அவரின் சடலத்தைக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*(அ)*

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 25 புன்னாலை வீதி, ஆதன இலக்கங்கள் **108, 108, 1/1, 110, 110, 1/1, 112, 112, 1/1, 114** என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எஸ். தங்கவேலு, எஸ்.குமாரகுரு, எஸ். யோககுருவும் மருள்குருவும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இலக்கம் 7964 நன்கொடை உறுதி 30.05.2023ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கே.எஸ்.ஏ மதுரநாயகம் முகதாவில் வரையப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள்-

1) கனடாவைச் சேர்ந்த தங்கவடிவேலு செல்லத்துரை,
2) தங்கவடிவேலு நந்தகுமரன் (ஆகியோர் அற்றோனித்தத்துவக்காரர் சாந்தி அருள்சந்திரன்)மூலமும்
3) கனடாவைச் சேர்ந்த மோகனவேல் திருநாவுக்கரசு (அற்றோனித்தத்துவக்காரர் சாந்தி அருள் சந்திரன்)
4) அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ராஜ்குமார் செந்தில்குமரன்,
5) ராஜ்குமார் சிறீஜெயந்தி (அற்றோனித்தத்துவக்காரர் சாந்தி அருள்சந்திரன்)
6) அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த றட்ணவடிவேல் ரமேஷ் (அற்றோனித்தத்துவக்காரர் சாந்தி அருள்சந்திரன்)
7) வல்வெட்டித்துறையைச் சேர்ந்த யோககுரு ஆனந்தமயில்,
8) வாசுதேவன் நேரு கைம்பெண் மதிவதனி (அற்றோனித்தத்துவக்காரர் செல்வகுரு கைம்பெண் தயாலெட்சுமி)
9) வல்வெட்டித்துறையைச்சேர்ந்தபிரபாகரன்கைம்பெண்தேன்மொழி(அற்றோனித்தத்துவக்காரர் செல்வகுரு கைம்பெண் தயாலெட்சுமி) ஆகியோர்,

1ம், 2ம், 5ம்,7ம், 8ம், 9ம் பேர்களின் சகோதரியாக ராஜேந்திரன் பெண் தங்கரெட்ணம் என்பவருக்கு 13.11.1954ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். ஆர்.காராளசிங்கம் முகதாவில் 3061ம் இலக்க அறுதி உறுதி மூலம் 1ம், 2ம், பேரின் காலஞ்சென்ற தந்தையாரினதும், 3ம், 4ம், பேரின் காலஞ்சென்ற பேரனினதும் சொரியலாய் **1/4** பங்கு ஆதனம் சொந்தமானது.

13.11.1954ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். ஆர்.காராளசிங்கம் முகதாவில் 3062ம் இலக்க அறுதி உறுதி மூலம் 5ம் பேரின் காலஞ்சென்ற தந்தையாரினதும், 6ம் பேரின் காலஞ் சென்ற பேரனினதும் சொரியலாய் **1/4** பங்கு ஆதனம்.

13.11.1954ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். ஆர்.காராளசிங்கம் முகதாவில் 3063ம் இலக்க அறுதி உறுதி மூலம் 7ம் பேரின் காலஞ்சென்ற தந்தையாரின் சொரியலாய் **1/4** பங்கு ஆதனம்.

13.11.1954ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். ஆர்.காராளசிங்கம் முகதாவில் 3064ம் இலக்க அறுதி உறுதி மூலம் 8ம், 9ம், பேர்களின் காலஞ்சென்ற தந்தையாரின் சொரியலாய் **1/4** பங்கு ஆதனம்.

குறித்த ஆதனத்தை தங்கவடிவேல் செல்லத்துரையும், தங்கவடிவேல் நந்தகுமாரனும், மோகனவேல் திருநாவுக்கரசும், ராஜ்குமார் செந்தில்குமரனும், சாந்தி அருள்சந்திரனும், ரட்ணவடிவேல் ரமேஷ் உம்,யோககுரு ஆனந்தமயிலும், வாசுதேவன் நேரு கைம்பெண் மதிவதனியும், பிரபாகரன் கைம்பெண் தேன்மொழியும் 30.05.2023ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு **K.S.A** மதுரநாயகம் முகதாவில் 7964 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நெற்பரப்பு 2 குளி 08.59 விஸ்தீரண ஆதனத்தை றாஜேந்திரன் பெண் தங்கரெட்ணம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கு இறை, “சோனகன் தறை” பிரதேசெயலாளர் பிரிவு யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மாநகரசபை, கிராமசேவையாளர் பிரிவு **J/83.**

“சோனகன் தறை” நிலப்பரப்பு **2 1/2** (இரண்டரை). இதில் சொரியலாய் **1/4** பங்கு (இதன் பதிவு **D229/115,** அவ்வாறே மேற்படி இறை “சோனகன் தறை” நிலப்பரப்பு **2 1/2** (இரண்டரை ) இதில் சொரியலாய் **1/4** பங்கு (இதன் பதிவு **D229/115**), அவ்வாறே மேற்படி இறை “சோனகன் தறை” நிலப்பரப்பு **2 1/2** (இரண்டரை ) இதில் சொரியலாய் 4பங்கு (இதன் பதிவு **D229/115**), அவ்வாறே மேற்படி இறை “சோனகன் தறை” நிலப்பரப்பு **2 1/2** (இரண்டரை) இதில் சொரியலாய் **1/4** பங்கு (இதன் பதிவு **D229/115**), இவை நான்கும் ஒருங்கே சேர்ந்து மொத்த நிலப்பரப்பு **2 1/2** (இரண்டரை). ஆனால் இது உத்தரபெற்ற நிலஅளவையாளர் ரி.தங்கராஜா அவர்களால் 14.11.2022 ம் திகதி 12871ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தில் லொட் 1 எனக்குறிப்பிடப்பட்ட துண்டாகிய நிலப்பரப்பு 02 (இரண்டு) குளி 08.59 (சைபர் எட்டு தசம் ஐந்து ஒன்பது) மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும்.

இந்த நிலப்பரப்பு 2 குளி 08.59 ற்கும் எல்லைகள்:-

கிழக்கு : கணபதி ஐயர், முது ஐயர், என்பவர்களினதும், பங்குதாரர்களினதும் ஆதனம். வடக்கு: வண்ணார்ாண்ணை கதிரேசன் கோயில் ஆதனம்.
மேற்கு : சோமசுந்தர ஐயர் பெண் இரட்ணாம்பிகை அம்மாவின் ஆதனம்.
தெற்கு : றோட் (மானிப்பாயிலிருந்து கே.கே.எஸ். செல்லும்)
இதலடங்களும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 10 அராலி வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 50**A** ஆதனத்தின் ஆதனப் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்கார் என பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், நீர்வேலியைச் சேர்ந்த திருவாளர் இரத்தினசிங்கம் என்பவர் யாழ் நொத்தாரிசு ஜனாப் **M.M.**மன்சூர் என்பவர் முகதாவில் 1989ம் ஆண்டு நிறைவேறிய அறுதி உறுதி யுத்த காரணமாக பதிவு செய்யப்படவில்லை

குறித்த ஆதனம் இலக்கம் **153/14,** நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தற்பொழுது இல **257/1C**, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு சேகு பரீத் முகம்மதுசா பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் 2004.09.10 ம் திகதி 788ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்துகை உறுதிப்படி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பாம்படி மயிலன் புங்கடியும் நெற்பரப்பு மூன்று (நெ.ப.3) என தனக்குரியது என வெளிப்படுத்தியுள்ளளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று தென்மேற்கு இறை பாம்படி மயிலன் புங்கடியும் இராசாளிக்குளங்கரையும் நெற்பரப்பு மூன்று (நெ.ப.3)ம் சேதமடைந்த இரண்டு கிணறுகளும்.

இதற்கு எல்லைகள் :-
கிழக்கு : கந்தையா சூரியகுமாரின் (சூரியகுமாரன்) ஆதனம்,
வடக்கு : கந்தையா சூரியகுமாரின் (சூரியகுமாரன் ஆதனம்,
மேற்கு: எட்டடி அகல (8) பாதை நிலம்,
தெற்கு : அராலி வீதி,
இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்

தற்போது இவ்வாதனத்தை சேகு பரீத் முகம்மதுசா என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சேகு பரீத் முகம்மதுசா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயா மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## 13ஆவது திருத்தத்தை...

எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு பாராளுமன்றில் உள்ள அனைவரும் கலந்துரையாடி, தீர்மானம் ஒன்றை எட்ட வேண்டும்.

இதன் காரணமாகவே சர்வகட்சி கூட்டம் நடத்தப்பட்டது. எனினும், சில கட்சிகள் முழுமையாக தங்களது தீர்மானங்களை வெளியிடவில்லை. அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் எதிர்க்கட்சி அரசியலில் இருந்து வெளியேற வேண்டும்

அனைவரும் ஒன்றிணைந்து ஒரே பாதையில் சென்றால் மாத்திரமே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும். இந்தியா, சீனா உள்ளிட்ட பல நாடுகளில் அதிகார பகிர்வு காணப்படுகிறது.

மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்குமான அதிகாரம் வெவ்வேறாக குறிப்பிடப்படவில்லை. மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைக்கும் இடையேயான தொடர்பு உரிய முறையில் இல்லை. வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றபோது முரண்பாடு ஏற்படுகிறது.

இவ்வாறான பிரச்னைகள் காணப்படுகின்ற போதிலும் நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்த பல தலைவர்கள் மாகாண சபையின் ஊடாகவே பாராளுமன்றத்திற்கு வந்துள்ளனர்.

மாகாண சபை குறித்து கலந்துரையாடும் போது 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கையில் முக்கிய விடயமாக கருதப்படுகின்றது. அதனை புறந்தள்ளி விட்டு செயற்பட முடியாது.

மாகாண சபை முறை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் உரித்துடையதல்ல. இது 9 மாகாணங்களுக்கும் பொருத்தமானதாகும். மாகாண சபை தேர்தல் முறைமையை மாற்றுவதற்கும் அரசாங்கம் தயாராகவுள்ளது.

இதன்படி, பாராளுமன்றில் உடன்பாடு எட்டப்படுமாயின் மாவட்ட விகிதாசார தேர்தல் முறைமை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபைத் தேர்தலில் பங்கேற்கும் உரிமை மற்றும் பெண்களுக்கான ஆசன ஒதுக்கீட்டை 25 சதவீதமாக அதிகரித்தல் என மூன்று பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த முடியும்.

தற்போது மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பில் கருத்துரைக்கும்போது பலர் பொலிஸ் அதிகாரம் தொடர்பிலேயே கவனம் செலுத்துகின்றனர். எனினும் ஏனைய திருத்தங்கள் தொடர்பில் முதலில் கவனம் செலுத்துவோம். கட்டம் கட்டமாக முன்னோக்கி செல்ல முடியும்.

முதலில், இறுதியில் ஆரம்பிக்காமல் ஆரம்ப புள்ளியில் இருந்து தொடங்குவோம். எனவே, ஏனைய திருத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடி பொதுவானதொரு தீர்மானத்துக்கு செல்ல வேண்டும்.

இதேவேளை, விளக்கமறியல் கைதிகள், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய தண்டனைக் கைதிகள் என மூன்று வகை கைதிகள் சிறைச்சாலையில் உள்ளனர்.

அவர்களை நீதி அமைச்சரின் பரிந்துரையின் அடிப்படையில் மரண தண்டனை கைதிகள் தவிர்ந்த ஏனைய இரண்டு பிரிவினரையும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும்.

அதேநேரம் 11 கைதிகளை பொது மன்னிப்பின் கீழ் விடுவிப்பதற்கு ஜனாதிபதியின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய காணி ஆணைக்குழு மற்றும் தேசிய காணி கொள்கையொன்றை உருவாக்குவதை துரிதப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கான முயற்சிகளை காணாமல் போனோருக்கான அலுவலகம் முன்னெடுத்து வருகிறது.

இது தொடர்பான விசாரணைகளை விரைவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. காணாமல் போனோர் தொடர்பில் 21 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதேநேரம் தென்னிந்தியாவில் உள்ள புனர்வாழ்வு முகாம்களில் தங்கியுள்ள 2 ஆயிரத்து 678 இலங்கையர்களின் பட்டியல் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு கிடைத்துள்ளன.

அவர்களில், இலங்கையின் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் இரண்டையும் வைத்திருக்கும் நபர்கள் அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளை பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர்.

இந்த ஆவணங்களை வழங்குவதற்கான செயல்முறை இரண்டு முதல் நான்கு வாரங்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டு படையினர் மற்றும் பொலிஸ் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலத்தின் கணிசமான பகுதிகள் 90 முதல் 92 சதவீதம் வரை படிப்படியாக விடுவிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் இறைமை மற்றும் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட போவதில்லை. வெளி நிறுவனங்களோ அல்லது வெளிநாடுகளோ நாட்டின் சவால்களை தீர்க்க முடியாது-என்றார். (அ)

## நான் இனவாதி...

என்னை தமிழ் மக்களின் ஆதரவாளர் என்கிறார். நான் யார்? என பாராளுமன்றத்தில் சுவாரஷ்யமாக கேள்வியெழுப்பினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நேற்று பாராளுமன்றத்தில், 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி உரையாற்றினார்.

இதன்பின்னர் உரையாற்றிய இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், 13ஆவது திருத்த விவகாரத்தை குழப்பமடைய வைப்பதில் ஜனாதிபதி வெற்றி பெற்றுள்ளார். இங்கு உரையாற்றியவர்களின் கருத்துக்களில் இருந்து அது தெரிகிறது. இனப்பிரச்னை தீர வேண்டுமென எத்தனை சிங்கள தலைவர்கள் விரும்புகிறார்கள். 13ஆவது திருத்த விவகாரத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்து, ஜனாதிபதி குழப்பியுள்ளார். சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்க மாட்டார்கள். தீர்வும் இல்லை, தேர்தலும் இல்லையென்றார்.

இதற்கு பதிலளித்த போதே, ஜனாதிபதி மேற்படி கேள்வியெழுப்பினார். (அ)

## சிறந்த முடிவு...

குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று எந்தவொரு மாகாண சபைக்கும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இந்தநிலையில், 13ஐ யாருக்காக நாம் நிறைவேற்றப் போகிறோம்?

தேர்தலுக்கு தற்போது நாட்டில் இடமில்லை. சர்வகட்சி மாநாட்டின் போது நாம் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தினோம். மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும். 2 மாகாணங்களுக்கும் மட்டுமன்றி, 9 மாகாணங்களுக்கும் தேர்தலை நடத்த முன்வர வேண்டும்.

மக்கள் ஆணை கிடைத்தவுடன், மாகாண சபைக்கான உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு, 13 தொடர்பாக கலந்துரையாட முடியும்.

134 பேரின் ஆணையுடன்தான் ஜனாதிபதி பாராளுமன்றில் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்கு கீழ்தான் அமைச்சரவை உள்ளது.

எனவே, தனக்கு பெரும்பான்மை இல்லை என்று ஜனாதிபதி கூறமுடியாது. எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஜனநாயகத்திற்காக நீங்கள் குரல் கொடுத்தீர்கள். இது ஜனாதிபதியான பின்னர் இல்லாமல் போகக்கூடாது. நீங்கள் சிறந்த முடிவுகளை எடுத்தால், எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்-என்றார். (அ)

## பறாளாய்...

அடைக்கலநாதன் ஆகியோர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து, பறாளாய் முருகன் கோயில் விடயமாக பேச்சு நடத்தினார்கள்.

இந்த விவகாரம் பற்றி இருவரும் தனது கவனத்திற்கு கொண்டு வருவதற்கு முன்னர், இப்படியொரு பிரச்னை நீடிப்பது தனது கவனத்துக்கு யாராலும் கொண்டு வரப்படவில்லையென ரணில் தெரிவித்தார்.

பறாளாய் முருகன் கோயிலின் வரலாறு சுமார் 300 ஆண்டுகளிற்கு உட்பட்டது என குறிப்பிட்டு, சம்பவத்தின் பின்னணியையும், வரலாற்று சுருக்கத்தையும் த.சித்தார்த்தன் விளக்கமளித்தார்.

இந்த விவகாரத்தில் 2 உண்மைகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ளவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர். இந்த மரம் 300 வருடங்கள் பழமையானது என்பதால், சங்கமித்தை இலங்கைக்கு 300 வருடங்களின் முன்னரே வந்தார். பௌத்தம் 300 வருடங்கள் மாத்திரமே பழமையானது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அல்லது, இந்த மரம் சங்கமித்தை நாட்டிய மரமல்ல என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர்கள் குறிப்பிட்டனர். பறாளாய் முருகன் கோயிலின் தல விருட்சமான அரச மரம், சங்கமித்தை நாட்டிய மரமாக இருக்காது என்பதே தனது அபிப்ராயம் என குறிப்பிட்ட ஜனாதிபதி, போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது நாட்டிலிருந்த அரச மரங்களையெல்லாம் தறித்து விட்டதாக தெரிவித்தார்.

அப்படியானால் வர்த்தமானியை மீளப்பெறுமாறு கூட்டமைப்பினர் வலியுறுத்தினர். மரத்தின் ஆயுட்காலத்தை அளவிடும் பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரா அது வர்த்தமானியிடப்பட்டது என கூட்டமைப்பினர் கேள்வியெழுப்பினர். அப்படியான பரிசோதனையெதுவும் மேற்கொள்ளாமல், இது சங்கமித்தை நாட்டிய மரம் என்ற முடிவுக்கு எப்படி தொல்லியல் திணைக்களம் வந்தது என கூட்டமைப்பினர் கேள்வியெழுப்பினர்.

இதன்மூலம், அந்த வர்த்தமானி இனவாத நோக்கமுடைய, சட்டபூர்வமற்ற வர்த்தமானியென்பது புலப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர்.

இதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, தொல்லியல் திணைக்களம் முறையற்ற விதமாக செயல்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டதுடன், அவர்கள் எந்த விஞ்ஞானபூர்வ நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் எப்படி வர்த்தமானியிட்டார்கள் என்பது தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி அறிக்கையிட, தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை பணித்தார். (அ)

## யாரும்...

தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் நிலைப்பாட்டில் உள்ளவர் என்று பிரசன்ன ரணதுங்க கூறினார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபோது, நாங்கள் உங்களை சந்தித்த போது, அதிகாரத்தை பரவலாக்கி அரசியல் பிரச்னைக்குத் தீர்வைக் காணுமாறு வலியுறுத்தினோம்.

ஆனால், அவர் செய்யவில்லை. இப்போது மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த விடயத்தில் யாரும் காலை வாரிவிடக் கூடாது. இந்தப் பிரச்னையை நாம் இப்போதே தீர்த்துவிடுவோம்.

நாம் அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரத் தயாராகவுள்ளோம்-என்றார். (அ)

## சமஷ்டியே...

மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரின் ஒப்பமிட்ட கடிதம் நேற்று அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. (அ)

## மக்களின்...

முன்னெடுக்கப்பட்ட காலத்தில், புதிய பிரதமர் நியமனம், அமைச்சரவை நியமனம் மற்றும் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் என்பன இடம்பெற்ற போதிலும் மக்களின் விருப்பங்களும் அபிலாஷைகளும் நிறைவேற்றப்படவில்லை என வெறைற்றி றிசேர்ச் நிறுவனத்தின் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

போராட்டம், மக்களின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்ற வழிவகுத்ததாக நீங்கள் நினைக்கிறீர்களா என்ற கேள்விக்கு, 60 வீதமானோர் ‘பெரும்பாலும் இல்லை’ என தெரிவித்ததாக வெறைற்றி றிசேர்ச் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## சர்வஜன...

தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஆற்றிய விசேட உரையை தொடர்ந்து கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு சவால் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு முழுமையான தீர்வு ஒன்று வரக் கூடாது என்பதே ஜனாதிபதியின் உரையை தொடர்ந்து உரையாற்றியவர்களின் கருத்துக்களாகவுள்ளன.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண எத்தனை சிங்கள தலைவர்கள் தயாராக இருக்கின்றீர்கள்? தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா,சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா என்பதை அறிய வடக்கு-கிழக்கு தமிழர்கள்,மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்ககளிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசு தயாரா ? என கேள்வியெழுப்பினார். (அ)

## உரியநேரத்தில்...

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் எம். பி. தெரிவித்தார்.

‘13ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நாட்டின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்’ - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனிடம் நேற்றிரவு வினவிய போது,

“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் எமது உறுதியான நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்துக்குப் பின்னர் அவர் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்திலும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நாம் எழுதிய கடிதத்திலும் தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

இந்தநிலையில், 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டுப் பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்.” - என்று குறிப்பிட்டார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு-கிழக்கு சிங்களவர் குறித்து ஜனாதிபதிக்கு அக்கறை கிடையாது

## சபையில் கூறினார் விமல் வீரவன்ஸ



**கொழும்பு, ஒக. 10**

**வடக்கு- கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் பிரச்னைகள் குறித்து ஜனாதிபதிக்கு அக்க றையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரை யாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு- கிழக்கு மாகாணங் களின் உள்ள தமிழ் மக்களின் பிரச் னைகள் தொடர்பாக தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் பேசுவதாக ஜனாதிபதி கூறினார்.

முஸ்லிம்களின் பிரச்னைகள் தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதி களுடன் பேசுவதாகக் கூறினார்.

ஆனால், அந்த மாகாணங்களில் வாழும் சிங்கள மக்களின் பிரச் னைகள் குறித்து ஜனாதிபதிக்கு தெரியவில்லையா?

யாழ்ப்பாணம் திஸ்ஸ விகா ரையில் சமயக்கிரியைகளில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டது. குருந்தூர்மலையில் பிரச்னை உள்ளது.

வடக்கு-கிழக்கில் சிறுபான் மையாக வாழும் சிங்கள மக்கள் எவ்வளவு பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் தெரியுமா?

எனவே, ஒரு தரப்பினரின் பிரச்னைகளை மட்டும் பார்க்கா மல், அனைத்து இன மக்களின் பிரச்னைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி மக்கள் பிரதிநிதி களுடன் பேச்சு நடத்த வேண்டும்- என்றார். (அ)

## ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு பொதுஜன பெரமுனவினர் தடை!

கொழும்பு, ஒக. 10

ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு, அரசாங்கத்தின் பிரதான கட்சியாக இருக்கும் பொதுஜன பெரமுன எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக பாராளுமன்ற உறுப் பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி செய்யும் முயற்சிக்கு, அரசாங்கத்தின் பிரதானக் கட்சியாக இருக்கும் பொதுஜன பெரமுன எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

எனவே, இந்த செயற்பாடு ஜனாதிபதியின் தனிப் பட்ட விருப்பமா அல்லது அரசாங்கத்தின் நிலைப்பாடா என தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

ஜனாதிபதியின் இந்த யோசனைகள் தொடர்பாக பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு என்ன? இதற் கான பதிலை அந்தக் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கவேண்டும்.

அதேநேரம், வடக்கு - கிழக்கில் உள்ள சிங்கள மக்களின் கருத்துக்களையும் இந்த விவகாரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கத் தயாராக உள்ளோம் - என்றார். (அ)

## கிழக்கு அபிவிருத்தி குறித்து சம்பந்தன் -செந்தில் பேச்சு



கொழும்பு, ஒக. 10

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இரா.சம்பந்தனின் இல்லத்தில் இந்தச்சந்திப்பு இடம் பெற்றதாக கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில், கிழக்கு மாகாணத்தில் மேற்கொள் ளப்பட்ட அபிவிருத்திகள் குறித்து இரா.சம்பந்தனுக்கு ஆளுநர் விளக்கமளித்ததுடன், எதிர்காலத்தில் முன்னெ டுக்கப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் தெளிவுபடுத் தினார்.

இதேவேளை, சமகால அரசியல் விடயங்கள் குறித் தும் இருவரும் கலந்துரையாடியுடன், இ.தொ.கா மற் றும் தமிழ் அரசுக் கட்சி இடையிலான நட்புறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இருவரும் அவதானம் செலுத்தினர். (அ)

## வறட்சியால் 7 மாவட்டங்களில் 93,171 மக்கள் இதுவரை பாதிப்பு

கொழும்பு, ஒக. 10

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரண மாக 93,171 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறட்சியினால் யாழ்ப்பாணம், மன்னார், திருகோண மலை, புத்தளம், குருணாகல், பதுளை மற்றும் இரத்தின புரி ஆகிய 7 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிலவும் கடும் வறட்சி காரணமாக வெவ்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெப்பத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு அடிக் கடி நீர் அருந்துமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம், வைத்தியர் விஜேசூரிய ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

## பிறந்த சிசுவை உடனடியாக கால்வாயில் வீசிய பெற்றோர்!

கொழும்பு, ஒக. 10

முல்லேரியா - கௌனிமுல்ல பகுதியில் பிறந்த சிசுவை வீட்டின் அருகில் உள்ள கால்வாயில் வீசிய தாயும் அவரது கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட் டனர்.

நேற்று முன் தினம் இரவு இந்த சிசு பிறந்துள்ள நிலை யில், அருகில் உள்ள கால்வாய் ஓரத்தில் வீசிச் சென்றுள் ளதாக பொலிஸார் கூறினர்.

அப்பகுதி வாழ் மக்கள் சிசுவின் சடலத்தை கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டது.

அதனையடுத்து, பிரதேசவாசிகள் குறித்த பெண்ணை கண்டுபிடித்ததாக தெரிவிக்கப்பட்டது. குறித்த பெண், முல்லேரியா, பண்டார மாவத்தையில் தனது கணவர் வீட்டில் சிசுவை பிரசவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் பொரளை - வனாத்தமுல்லை, சஹஸ்புர பிர தேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய பெண் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த பெண்ணும் அவரது கணவரும் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருப்பதாகவும், இதனால் பிரசவித்து சிசுவை தூக்கி எறிந்து இருக்கலாம் எனவும் அப்பகுதி மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முல்லேரியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## அதிகாரப் பரவலாக்கல் குறித்து பெரமுனவுக்குள் குழப்பமில்லை

### கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஒக. 10

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பொதுஜன பெரமுனவிற்குள் எந்தப் பிரச்னையும் கிடையாது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜ பக்ஷ, ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நீண்ட காலமாக உள்ளவர்.

மாகாண சபைகளின் முதல்வர்களை அமைச்சர வைக்குள் அழைத்து பேச்சு நடத்தியவர் தான் மகிந்த ராஜபக்ஷ.

அத்தோடு, 13 பிளஸ் தருவதாக அப்போதே அவர் கூறியிருந்தார்.

எனவே, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பொதுஜன பெரமுனவுக்குள் எந்தப் பிரச்னையும் கிடையாது.

சர்வகட்சி மாநாட்டின்போது, நாம் இந்த நிலைப் பாட்டை தெளிவாக எடுத்துரைப்போம்-என்றார். (அ)

# மயிலந்தனை படுகொலை நினைவுநாள்

மட்டக்களப்பு, ஒக. 10

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் மயிலந்தனை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று புதன்கிழமை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.

உயிர் நீத்தவர்களின் நினைவாக ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று, பொதுச் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தியதுடன் உணர்வுபூர்வமாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

நினைவேந்தல் உரையினை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ குகன் மற்றும் வடக்கு, கிழக்கு ஒருங்கி ணைப்பு குழுவின் செயற்பாட்டாளர் கண்டுமணி லவகுகராசா ஆகியோர்கள் நிகழ்த்தினார்கள்.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர் களின் குடும்ப உறவுகளுக்கு நீதி கோரிய மகஜர் ஒன்றும் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கடந்த 9.8.1992 ஆம் ஆண்டு அன்று புனானை மயிலந்தனை கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள், பெண்கள் உட்பட 39 பேர் வெட்டியும் சுடப்பட் டும் படுகொலை செய்யப்பட்டனர். 34 பேர் காயமடைந்தனர்.

நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் புனானை இராணுவத்தினரே இப் படுகொலையை நிகழ்த்தியதாக தெரிவித்து வழக்கு தொடுக்கப்பட் டது.




அப்போது இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் 24 இராணுவத்தினர் அடையாளம் காட்டப்பட்டனர்.

வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எந்த ஒரு இராணுவத் தினரும் குற்றம் இழைக்கவில்லை என தீர்ப்பளிக்கப்பட்டது. மேன் முறையீடு செய்வதற்கு அப்போதிருந்த சட்டமா அதிபர் ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே 2002 நவம்பர் 27 இல் குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.